# அரசியல் ரீதியில் முடிவு ஏற்படும்வரை பொறுக்க வேண்டும்!


Registered as a News Paper in Ceylon — விலை சதம் 15 ★ ★






# ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49 — மலர் 12

போன் : 389 — இதழ் 187

தேசிய தினசரி

யாழ்ப்பாணம் ஆவணி 1 ஜமா. ஆகிர் 14 திங்கட்கிழமை [17-8-70]





## சிங்கள போதனைபற்றி

### தமிழரசு செயற்குழு தீர்மானம்

மட்டுவில், ஞாயிறு

தமிழ்ப் பாடசாலைகளில் சிங்களம் போதிப்பது 1956-ம் ஆண்டு தொடக்கம் ஓர் அரசியல் பிரச்னையாக இருந்துவருகிறது. ஆகவே இப்பிரச்னை அரசியல் ரீதியாகத் தீர்க்கப்படும்வரை கல்லூரிகளில் தங்கள் பிள்ளைகளுக்குச் சிங்களம் போதிப்பதை நிறுத்த வேண்டும். இப்படிச் செய்யாதபட்சத்தில் தமிழ் மக்களிடையே உள்ள ஒற்றுமை குறைந்து மொழி உரிமை இயக்கத்தில் ஒரு தேக்கம் ஏற்பட்டுவிடும். ஆகையால் இவ்விடயத்தில் ஓர் அரசியல் முடிவு ஏற்படும்வரை பெற்றோர்களைப் பொறுத்திருக்குமாறு இன்று சாவகச்சேரியில் நடைபெற்ற தமிழரசுக் கட்சிச் செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

தமிழ் நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பத்திரிகைகள் சஞ்சிகைகளைத் தடுக்கவோ குறைக்கவோ ஐக்கிய முன்னணி அரசாங்கம் முயல்வது வேதனைக்குரியது. இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தில் ஒலிபரப்பப்படும் இந்திய இசைத்தட்டுக்களை நிறுத்த முயல்வது தமிழ் மக்களுக்கு எதிரான பாரபட்சமான நடவடிக்கையாகும். இந்நடவடிக்கையை உடன் கைவிடுமாறு அரசாங்கத்தைக் கோருவது

இலங்கை-இந்திய ஒப்பந்தம் சட்டப்பிரகாரம் பதிவு செய்யப்பட்ட விகிதப்படி கொடுக்கப்பட வேண்டும். அப்படி செய்வதற்கு அரசாங்கம் தவறிவிட்டது ஒப்பந்தப்படி ஏற்றுக்கொண்ட முறையில் அரசாங்கம் நடந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறது.

### இந்திய ஏடுகளுக்கு தடைவிதித்தால்...

இந்தியாவிலிருந்து குறிப்பாக தமிழ் நாட்டிலிருந்து இங்குதருவிக்கப்படும் தமிழ் ஏடுகளைக் கட்டுப்படுத்துவது சம்பந்தமாக இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுக்கப்போவதாக கூறப்படுவது பற்றி இன்று சாவகச்சேரியில் ஆரம்பமான தமிழரசுக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் வன்மையான எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

அரசாங்கத்தின் இந்தஉத்தேச நடவடிக்கை பற்றிபல அங்கத்தவர்கள் காரசாரமாகக் கண்டித்துப் பேசினார்கள்.

இந்தியாவிலிருந்து இங்கு தருவிக்கப்படும் தி மு கழக ஏடுகளை மட்டும் வைத்துக்கொண்டு அங்கிருந்துவரும் எல்லா ஏடுகளையுமே கட்டுப்படுத்த முற்படுவதுபேதமை என்று பல அங்கத்தவர்கள் எடுத்துக் கூறினார்கள். தரமற்ற ஏடுகள் இந்தியாவில் இருந்து மட்டுமல்ல வேறு நாடுகளிலிருந்தும் தருவிக்கப்படுகின்றன. ஏன் இலங்கையிலேயும் கூடவெளியிடப்படுகின்றன. இவைகளை கட்டுப்படுத்துவது மட்டுமின்றி தடைசெய்யப்படவும் வேண்டும். ஆனால் தமிழ் நாட்டுடன் எமக்கிருந்து வரும்பாரம்பரியமான இலக்கிய, கலாசார உதவிகளை அடியோடு துண்டித்துவிடும் வகையில் அங்கிருந்துவரும் நம் சமய இலக்கிய கலாசார ஏடுகளைத் தடை செய்வதையோ கட்டுப்படுத்துவதையோ நாம் ஒப்புக்கொள்ள முடியாது என்று சில அங்கத்தவர்கள் சுட்டிக்காட்டியதாகத் தெரிகின்றது.

இந்த ஏடுகள் தடைசெய்யப்படுவதினால் எமது மதம்,


(4-ம் பக்கம் பார்க்க)


## கடற்படையினரின் செயலா?

# பொதுமக்களைத் தாக்கி, கடைகள் உடைத்து, பணம் சூறை!

## திருகோணமலையில் நடந்த அட்டகாசம்

திருகோணமலை, ஞாயிறு

**திருகோணமலையில் நேற்று இரவு பொதுமக்கள் பயங்கர ஆயுதங்களால் தாக்கப்பட்டார்கள். பல கடைகள் உடைக்கப்பட்டு, பொருட்களும் பணமும் சூறையாடப் பட்டன. கடற்படைச் சிப்பாய்களே இந்தத் தாக்குதலை நடாத்தியதாக பொதுமக்கள் புகாரில் தெரிவித்துள்ளனர்.**

சிலை வீடுகளும் இந்தஅட்ட க[...]ந்தினுல் சேதத்துக்குள் ள[...]தாகத் தெரியவருகிறது பொதுமக்கள் இதனுல் பெருத்த பீதியடைந்துள்ளனர். யூனிபோம் அணிந்திருந்ததாக[...] 150 கட[...] தி[...]லை சின்னமுற்றவெளி

பந்தமாகச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு, இந்த அ[...]க்கு முடிவு ஏற்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

திருமலை அரசாங்க அதிபரிடம் இச்சம்பவம் குறித்து பொதுமக்கள் புகார் செய்தனர். திருமலையில் இப்போது பரபரப்பான ஒரு சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

## தோல்பொருட்கள் குறைந்த விலையில் கிடைக்கும்

கோட்டை, ஞாயிறு

தோல்உற்பத்திக் கூட்டுஸ்தாபனம், தமது ஸ்தாபனத்தில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை விற்பனவு செய்வதற்காக புதிய பிரச்சாரம் ஒன்றைச் செய்யவிருக்கிறது உள்நாட்டில் செய்யப்பட்ட சப்பாத்துப் போன்ற தோல் பொருட்கள் பல இவ்விற்பனவில் குறைந்த விலைக்குக்கிடைக்குமெனத் தெரியவருகிறது ஒரு கோடி ரூபாவுக்கும் மேலாகப் பெறுமதியுடைய தோற்பொருட்கள் இக்கூட்டுஸ்தாபனத்தில் தேங்கிக் கிடப்பதாக அறிவிக்கப்படுகிறது அப்பொருட்களை விற்பனவு செய்வதற்கே இப் புதிய பிரச்சாரம் மேற்கொள்ளப்படுகிறது.

— —

## சைக்கிளில்சென்றவர் விபத்துக்குள்ளானர்

இமையாணன், ஞாயிறு

இன்று மாலை கட்டப்பிராயில் நடைபெற்ற ஒரு விபத்தில் சைக்கிளில்சென்ற ஒருவர் காயத்துக்குள்ளானர்,

பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணம் சென்ற பஸ்ஸும் சைக்கிளும் விபத்

— —

## சரக்குக் கப்பல்

## மே ஐரோப்பிய நாடுகளுக்கு ஸ்ரீமா செல்வார்!

கோட்டை. ஞாயிறு

பிரதமர் திருமதி பண்டாரநாயக்கா லுசாக்காவில் நடைபெறும் மண்டலச்சார்பற்ற மகாநாட்டில் கலந்துகொண்ட பின்னர் மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கும் கிழக்குநாடுகளுக்கும் விஜயம் செய்யவுள்ளார்.

மண்டலச் சார்பற்ற நாடுகளின் உச்சி மகாநாடு செப்டம்பர் மாதம் 12-ம் திகதி நடைபெறவிருக்கிறது. பிரதமர் லுசாக்காவிலிருந்து பிரான்ஸ், ஐக்கிய இராச்சியம், மேற்கு ஜெர்மனி, ஐக்கிய அரபுக் குடியரசு ஆகிய நாடுகளுக்கு விஜயம்செய்யவுள்ளார். அரசாங்கத்தின் அரசியல் சமூக பொருள


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கோடி ரூபாவுக்கும் மேலாகப் பெறுமதியுடைய தோற்பொருட்கள் இக்கூட்டுஸ்தாபனத்தில் தேங்கிக்

— —

## சரக்குக் கப்பல் வருவது குறைவு

கோட்டை, ஞாயிறு

துறைமுகப் பண்டகசாலையிலிருந்து உணவுப் பொருட்கள் வெளிப் பகுதிகளுக்கு அனுப்பப்படுவதாகவும், அங்கு சரக்கிகள் வைப்பதற்குப் போதிய இடமிருப்பதாகவும், துறைமுகசரக்குக் கூட்டுத்தாபனத் தலைவர் தெரிவித்தார், கொழும்புத் துறைமுகத்திலும் திருக்கோணமலைத் துறைமுகத்திலும் சரக்கு இறக்குவது குறைவாக இப்பது வழக்கம். பொதுவாக இக்காலப் பகுதியில் சரக்குக்கப்பல் வருவது குறைவாக இருப்பது வழக்கம் எனவும் அவர் தெரிவித்தார்

பிராயில் நடைபெற்ற ஒரு விபத்தில் சைக்கிளில்சென்ற ஒருவர் காயத்துக்குள்ளானார்,

பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணம் சென்ற பஸ்ஸும் சைக்கிளும் விலத்தும்போது இவ்விபத்து ஏற்பட்டது.

இவ்விபத்தினல் நல்லூர் கந்தசாமி கோவிலுக்குச் செல்லும் பக்தர்கள் உட்பட பல பிரயாணிகள் நெடுந்தூரம் நடந்து செல்ல வேண்டி ஏற்பட்டது

— —

## டி,ரி, நைல்ஸ் இரங்கற் பூசை

யாழ்ப்பாணம், ஞாயிறு

வண. டாக்டர் டி. ரி. நைல்ஸ் அவர்களின் மறைவை முன்னிட்டு இரங்கற்பூசை நாளை மாலை 5 மணிக்கு கோட்டை தேவஸ்தானத்தில் நடைபெறவிருக்கிறது

தமர் லுசாக்காவிலிருந்து பிரான்ஸ், ஐக்கிய இராச்சியம், மேற்கு ஜெர்மனி, ஐக்கிய அரபுக் குடியரசு ஆகிய நாடுகளுக்கு விஜயம்செய்யவுள்ளார். அரசாங்கத்தின் அரசியல் சமூக பொருளதார நிலைமைகளினல் மேற்கத்தியநாடுகளிடையே நிலவும் தப்பபிப்பிராயத்தை நீக்குமுகமாகவே மேற்படி நாடுகளுக்குப் பிரதமர் விஜயம் செய்யவுள்ளார் எனத் தெரியவருகிறது

பிரதமருடன் பொதுநிர்வாக, உள்ளூராட்சி உள்நாட்டு விவகார அமைச்சர் திரு பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவும் செல்லவுள்ளார் செப்டம்பர் 4-ம் திகதிலுசாக்காவுக்குப்பயணமாகும் பிரதமர் மேற்படி நாடுகளுக்கும் விஜயம் செய்துவிட்டு தனது கணவரின் ஞாபகார்த்ததினமாகிய செப்டம்பர் 26-ம் திகதிக்கு முன்னர் நாடுதிரும்பிவிடுவார்.

றது பொதுமக்கள் இதனல் பெரிந்த பீதியடைந்துள்ளனர் யூனிபோம் அணிந்திருந்ததாகக் கூறப்படும் ஸிமார் 150 கடற்படை சிப்பாய்கள் தி[illegible]லை சின்னமுற்றவெளிக்கு அருகாமையிலுள்ள கடைகளுக்குள் புகுந்துபயங்கர ஆயுதங்களினல் உடைத்துஅங்கிருந்தபணத்தையும் பொருட்களையும் கொள்ளையடித்ததாகக் கூறப்படுகிறது.

கடையிலிருந்த வர்களும், வீதியால் சென்று கொண்டிடிந்தவர்களும் பயங்கர ஆயுதங்களினல் படுமோசமாகத் தாக்கப்பட்டார்களாம். பலர் பலத்த காயங்களுக்குள்ளானதாக அறியப்படுகிறது.

சவள். இரும்புக்கம்பி, டைனமைற் மேன்ற பயங்கர ஆயுதங்களை உபயோகித்த தாகக் கூறப்படுகிறது. இரவு 9மணிக்கு மேல் நடந்த இச் சம்பவத்தில் சில வீடுகளும் தாக்குதலுக்குள்ளானதாம்.

திருமலையிலுள்ள பெரிய தேநீர் கடையொன்றிற்கு டைனமைற் வீசப்பட்டதுடன், பணமும் சூறையாடப் பட்டதாம்.

### எதிரொலி

கடந்த 9ம் திகதி கடற்படை வீரர்களுக்கும் பொதுமக்களுக்குமிடையில் நடந்த மோதலின் எதிரொலியாகவே இது நடந்திருக்கலாமெனக் கருதப்படுகிறது

இலங்கை உதைபந்தாட்டச் சங்கத்தின் ஆதரவில் திருமலையில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியின் இறுதியில் இந்த மோதல் நடந்தது தெரிந்ததே.

இச் சம்பவம் பற்றி கொழும்பில் அச்சமயம் இருந்த திருமலை எம் பி. திரு. நேமிநாதனுக்கு அறிவிக்கப் பட்டதும், அவர் இது சம்

முடிவு ஏற்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

னர். திருமலையில் இப்போது பரபரப்பான ஒரு சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

டுக்கொள்கிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

# சகல தமிழ் பெற்ரோர்களும் முடிவுசெய்யவேண்டும்!

—சாவகச்சேரி எம் பி

திருநெல்வேலி, ஞாயிறு

'நான் ஒரு பெற்ருர் என்ற முறையில் இத் தீர்மானத்தை ஆராயாமல் நான் ஒரு தமிழன் என்ற முறையில் இப்பிரச்னையை ஆராய முற்படுகிறேன். சிங்களமொழி ஒருபாடமாக்கப்பட் வேண்டும்என்றபிரச்னை இக்கல்லூரி பெற்ரோர் ஆசிரியர்களுக்கு மாத்திரமல்ல, இந்த நாட்டில் வாழும் சகல தமிழ்ப் பாடசாலைகளுக்கும் உள்ள பிரச்னையாகும். எனவே இதற்கு முடிவு காணவேண்டியது சகல தமிழ்ப்பாடசாலைகளிலும் கல்வி கற்கும் மாணவர்களின் பெற்ரோர்களே ஆதலால் சகல பெற்ரோர்களும் ஒன்றுகூடி முடிவுசெய்யவேண்டும்,

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெற்ற பெற்ருர் ஆசிரியர் சங்க ஆலோசனைக்கூட்டத்தில் சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் சிங்களமொழி ஒரு பாடமாக போதிக்கப் படவேண்டும் என்ற தீர்மானம் பற்றி பசும்போது மேற்கண்டவாறு கூறினர்.

இந்துக்கல்லூரி அதிபர் திரு. என். சபாரத்தினம் தலைமையில் நடைபெற்றஇக் கூட்டத்தில், பெற்ரோர்களும் ஆசிரியர்களும் கலந்துகொண்டனர்.

திரு. இ. மகாதேவா பேசும்போது கூறியதாவது:

இத்தீர்மானம் பத்தாண்டுகளுக்குப் பின்னனர் ஏற்படப்போகின்ற இலாபத்திற்காக தீர்மானிக்கப்படுகிறது பல்லாண்டுகளாக எம்மை ஆண்டவர்கள் ஆங்கிலேயர்கள். அப்பொழுது ஆங்கிலத்திலேயே பாடங்களைப் படிப்பித்தார்கள் தமிழர்கள். அப்பொழுது ஏற்படாத தாய்மொழிப்பாசம் இப்பொழுது ஏற்பட்டதா? மற்றப் பாடசாலைகள் இதைப்பற்றி ஆராயாத வேளையில் நாம் இதைப்பற்றி ஆலோசனை செய்தால், இப்பிரச்னையைக் கிளப்பிவிட்ட குற்றம் இந்துக்கல்லூரியையே சாரும். எனவே இப்பிரச்னையை ஆராயாமல் முற்றுப்புள்ளி வைப்பதே நல்லது.

இன்னும் சில மாதங்களில் அரசியல் நிர்ணயசபை கூடப்போவதாகவும், அதில் சிறுபான்மை இனத்தவருக்கு சலுகை அளிக்கப்பட இருப்பதாகவும் அதுவரை பொறுத்திருப்பது நல்லதென்றும் பெற்ருர் ஒருவர் தெரிவித்தார்

அரசியல்நிலை நிமிடத்திற்கு நிமிடம் மாறுகிறதென்றும். இப்பிரச்னை எமது பிள்ளைகள் உத்தியோகம் பெறும்போது பாதிக்குமென்றும், உடனே முடிவு காணவேண்டுமென்றும் மற்ெருரு பெற்ருர் கூறினர்.

இவ்விஷயம் ஆறுதலாக ஆராயப்படவேண்டுமென்று பலர் கூறியதால், தலைவர் அடுத்தகூட்டத்திற்கு இதனை ஒத்திவைத்தார்.

---

வர்த்தக மோசடி

## செய்வோர் குடியுரிமை இழக்க நேரிடும்

கொழும்பு, ஞாயிறு

தேச நலனுக்கும் சமூக நலனுக்கும் முரண்பட்ட முறையில் இந்தியவம்சவழியினர் நடந்து கொண்டார்கள் என்ற பேரில் 25பேர் விசாரிக்கப்படவிருக்கிறார்கள் இவர்களில் சிலர் கௌரவப் பிரஜைகள் என்று தெரிய வருகிறது

அந்நியச்செலாவணி வர்த்தக மோசடி செய்தார்கள் என்றவகையில் இவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது யாராவது இவ்வித குற்றம் செய்தால் இந்திய-பாகிஸ்தானிய குடியுரிமைச் சட்டத்தின் 24-வது பிரிவின் கீழ் தண்டிக்கப்படுவார்கள் என்று சிம்மாசனப் பிரசங்கத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது இவ்வித குற்றம் செய்வோர் குடியுரிமையை இழக்க நேரிடும்எனத்தெரிய வருகிறது.

---

## அம்மைப்பால் குத்துங்கள்

கோட்டை, ஞாயிறு

அம்மைப்பால் குத்தாத பிள்ளைகளை அடுத்தாண்டு முதலாம் வகுப்புக்கு சேர்க்கக்கூடாது.

இவ்வாறு கல்வி அமைச்சு நாட்டிலுள்ள சகல பாடசாலைகளினது அதிபர்களையும் கேட்டுள்ளது. 1971-ம் ஆண்டு முதலாம் தரத்துக்கு பாடசாலைகளில் சேர்க்கும் பிள்ளைகள் யாவர்க்கும் பெற்ரோர்கள் அம்மைப்பால் குத்துவித்திருக்கவேண்டும், இல்லாவிடில் அப்பிள்ளைகள் பாடசாலையில் சேர்த்துக்கொள்ளப்படமாட்டார்கள் எனவும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.


# மகத்தான ஆரம்ப விழா



படப்பிடிப்பு: 'சிட்டு'

நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த உங்கள் அபிமானத்திற்கும், நம்பிக்கைக்கும் உரிய நகைகள், வைர வியாபாரிகளின் புதிய ஸ்தாபன ஆரம்பவிழா! இன்று 17—8—70 திங்கட்கிழமை நடைபெறும் என்பதை எங்கள் வாடிக்கையாளர்களுக்கு பெருமிதத்துடன் அறிவிக்கின்றோம்!

இப்படிக்கு,

உங்கள் ஆதரவையும், அபிமானத்தையும் நாடும்

## எஸ். எல். எம். தீபி அன் சன்ஸ்,

நகைகள், வைரவியாபாரிகள்

R. G. பில்டிங், கன்னதிட்டி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிவிளம்பரம்

### தேவை

ஸ்ரீ விஞயகா நெசவு வாப் நிலையத்தில் நெசவு வேலை செய்யக்கூடிய ஆண் பெண் இருபாலாரும் தேவை. 17 8-70ல் நேரில் சந்திக்கவும். ஸ்ரீ விஞயகா நெசவு வாப் நிலயம், பிரதான வீதி, சங்கானை. 2179

### விற்பனைக்கு

கார்:

சொந்தக்காரரால் செலுத்தப்பட்ட வைக்சோல் Wyvern - EL 4870 நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க. சிவப்பிரகாசம், 49, கொழும்புத்துறை வீதி, சுண்டிக்குளி. 2183

கந்தரோடையில் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்குப் பின்புறம் பிஞக்கைக் குளத்துக்கு அண்மையில் உள்ள பதிஞெரு பரப்பு தோட்டக் காணி. லாண்ட் இன்வெஸ்ட்மென்ட், 6, பிரதான வீதி, யாழ்ப்பாணம். 2184

புதிய இரும்புப்பெட்டகம் (Iron safe) அளவு 2X2 1/2. விபரங்களுக்கு N. M. A. 70/1 கன்ஞதிட்டி, யாழ்ப்பாணம். 3062

## வியாபாரம்பெருக விளம்பரம் செய்க

**வெஸ்லிசினிமா**
மானிப்பாய்
தினசரி: 6-30, 9-30
போயா, பிரிப்போயா 2-30
சிவாஜி — கே ஆர். விஜயா
நடித்த
**ஊட்டி வரை உறவு**

**ஸ்ரீகாலிங்கன்**
இணுவில்
தினசரி 6-30, 9-30மணி
போயா, பிரிபோயா 2-30
சிவாஜி — ஜமுஞ
நடித்த
**தங்கமலை ரகசியம்**

**MANOHARA**
**JAFFNA**
Daily 4-45, 7-00 & 9-45 p m.
Pre-Poya, Poya 10-30 a m.
Edward Judd,
Olinka Borova
in
THE VENGEANCE
OF SHE
(Color)


# இன்றைய பலன்

(ஆவணி மாதம் 1-ம் திகதி)

(17-8-70)

மேஷம்- பிரிந்தவர்கள் வாழ்க்கையில் மீண்டும் இணைவர். குடும்ப பிரச்னைகளில் சுமுகமான நிலை தென்படும்.

ரிஷபம்- அன்னியர் சகவாசமும் உங்களை ஆபத்தில் மாட்டிவைக்கும். சிறிய விடயத்திற்கு கூட அதிகம் ஆத்திரப்படுவீர்கள் அடக்கம் வேண்டும்

மிதுனம்- இதயத்திற்கு இதம்தரும் செய்தியொன்றும் கிடைக்கலாம் புண்ணிய கருமங்களில் விருப்பம் மேலிடும்.

கடகம்- உத்தியோக உயர்வுடன் உரிமையும் கிடைக்கும். உற்சாகமாக கடமையாற்றுவீர்கள். உவகை சேரும்.

சிம்மம்- இளமை நினைவுகள் நிழலாட்டம் போடும் காதல் கணை தாக்கும், கவிஞர்கள் கௌரவிக்கப்படுவார்கள்.

கன்னி- துன்பத்தின் ரேகை படரும். எதிலும் தயக்கம் ஏற்படும். நிதானம் வேண்டும்.

துலாம்- கழுகுப்பார்வை உங்களை வட்டமிடும். எடுத்த காரிபத்தில் தாமதம் ஏற்படலாம்.

விருட்சிகம்- இதயப் படுதாவில் இன்பக் கூத்து. வாழ்க்கை சௌகரியங்கள் நிறைந்ததாக இருக்கும்.

தனு- அவசரக்கோலம் தலைகாட்டும், அதன்வழித் துன்பங்கள் தொடரும், ஆசாரக் குறைவும் உண்டு.

மகரம்-வாகனசுகத்துடன் வாழ்க்கை நலன் வந்து சேரும். தாய்வழித்தனத்துடன் தன்மானம் தலை தூக்கும்

கும்பம்- அறிவுப்பசிக்கு இன்று தாராளமாக விருந்து கிடைக்கும். ஆராய்ச்சியில் ஆர்வம் பிறக்கும்.

மீனம்- உறவாடிக்கெடுப்பதற்கும் பகையாளிகள் வருவர். உற்சாகம் குன்றும். உடல்நலத்தைப் பேணவும்.

சோதிடக்கலாநிதி
**திருமலை**
**கு. வேலுப்பிள்ளை**


**ராஜா** (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
ஜெய்சங்கர் — விஜயலட்சுமி
நடித்த
**உயிர் மேல் ஆசை**


# வல்வெட்டி வளர்மதி கழக விளையாட்டு போட்டி

வல்வெட்டித்துறை, சனி

வல்வெட்டி வளர்மதிவிளையாட்டுக் கழகத்தின் 8-வது வருடாந்த விளையாட்டுப் போட்டி இம்மாதம் 30-ம், 31-ம் திகதிகளில் நடைபெறவிருக்கின்றது.

8-வது வருடாந்த விளையாட்டுப் போட்டியை முன்னிட்டு அகில இலங்கை ரீதியில் 15 மைல் சைக்கிளோட்டப்போட்டி, 5 மைல் மரதன் ஓட்டப்போட்டி, வடமராட்சி ரீதியில் மல்யுத்தப் போட்டி மற்றும், கிறிஸ் கம்பம் ஏறும்போட்டி, கழகங்களுக்கான அஞ்சல் ஓட்டப்போட்டி புதையல்தேடுதல் ஆகியவை இடம் பெறவிருக்கின்றன இப்போட்டிகளில் பங்குகொள்ளவிரும்புகின்றவர்கள் வல்வெட்டி வளர்மதி கழகத்துடன் தொடர்புகொள்ளலாம்.

31ந் திகதி நிகழ்ச்சிகளுக்கு திருமலை சாணி அபிவிருத்தி அதிகாரி திரு எஸ். தேவதாஸ் தலைமைவகிப்பார் பிரதம விருந்தினராக பலாலி கனிஷ்ட பல்கலைக் கழக அதிபர் திரு. கே. சிவபாலன் கலந்து கொள்வார்.

சமூக சேவைப் பரீட்சையில்

# 'டிப்ளோமா' பட்டம் பெற்ற ஒரே தமிழர்!

தாவடி, ஞாயிறு

இலங்கை சமூக (சேவைப் பகுதியாரால் நடாத்தப்பட்ட பரீட்சையில் தோற்றி 'டிப்ளோமா' பட்டம் பெற்றுள்ளார் தாவடியைச் சேர்ந்த திரு இராமலிங்கம் சரவணபவான். இலங்கைச் சமூகசேவைப் பாடசாலையினுல் நடாத்தப்பட்ட இப் பரீட்சையில் 32 பேர் தோற்றிஞர்கள். அவர்களில் சித்தியடைந்த மூவரில் இருவர் சிங்களவர். ஒருவரே தமிழர் என்பது குறிப்பிடத்தக்கது திரு. சரவணபவான் 'கயரோக பிரச்னை' என்ற கட்டுரையையும் திறம்பட எழுதிப் பாராட்டுதலையும் பெற்றுள்ளார்.

# 'உடனடியாக சிங்களத்தில் செயலாற்ற ஆரம்பிக்குக'

## பொலிஸ் நிலையங்களுக்கு ஐ. ஜி. பி. உத்தரவு

கோட்டை, ஞாயிறு

நாட்டில் உள்ள சகல பொலிஸ் நிலையங்களிலும் அலுவல்கள் சிங்களத்தில் உடனடியாக நடைபெற வேண்டும் என பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. ஸ்ரான்லிசேனநாயக்கா உத்தரவிட்டுள்ளார்.

நாட்டின் சகல பொலிஸ் நிலையங்களிலுமுள்ள சிங்களத் தேர்ச்சி பெருத அதிகாரிகளின் எண்ணிக்கையை அறிவிக்கும்படியும் திரு. ஸ்ரான்லி சேனநாயக்கா பொலிஸ் நிலையங்களுக்கு அறிவித்துள்ளதாகத் தெரியவருகிறது.

தற்போது சகல பொலிஸ் நிலையங்களிலும் அலுவல்கள் அநேகமாக ஆங்கிலத்திலேயே நடைபெறுகின்றன பொலிஸ் உயர் அதிகாரிகள் பலர் சிங்களத்தேர்ச்சி பெருதகாரணத்திஞலே யே அலுவல்களை ஆங்கிலத்தில் கவனிக்க வேண்டியுள்ளது என பொலிஸ் இலாகாவைச் சேர்ந்த தொழிற்சங்கங்கள் பொலிஸ் மா அதிபருக்குத் தெரிவித்துள்ளன.

# விவசாயிகளுக்கு பயிற்சி வகுப்பு

சங்கானை, ஞாயிறு

வலிகாமம் மேற்குப் பகுதியில் இவ்வருடம் காலபோக நெல் விதைப்புத் தொடங்குவதற்கு முன்னதாக பயிற்சி வகுப்பொன்று சங்கானை விவசாய விஸ்தரிப்பு நிலையத்தில் நடைபெற்றது. பல கிராமங்களிலிருந்தும் [illegible]

# நூல்கள் காட்சி

சுழிபுரம், ஞாயிறு

வட்டுக்கோட்டைத் தொகுதி தமிழ்ச் சங்கத்தினர் [illegible]ழிபுரம், அராலிநகர் வட்டுக்கோட்டை ஆகிய மூன்று இடங்களில் நூல் காட்சிகளை நடாத்தவுள்ளனர். ஒரே இடத்தில் பல் வகையான [illegible] பார்[illegible]யிட [illegible] கான சகல ஒழுங்குகளையும் [illegible]

# சைவ சமய அறிவுப்போட்டி

யாழ்ப்பாணம், திங்கள்

நல்லூர் வைமன் இந்து இளைஞர் இயக்கம் இவ்வாண்டும் சைவ அறிவுப் போட்டியை நடாத்துகிறது. சைவ சமயத்தவர் அனைவரும் பங்குபற்றலாம் என்றும் விடைகள் இம்மாதம் 25-ம் திகதிக்கு முன்னர் அனுப்பப்படவேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இளைப்பாறிய மாவட்ட நீதிபதி திரு. வி. தனபாலசிங்கம், பண்டிதர் இரா. சிவசுப்பிரமணியம் ஆகியோர் மத்தியஸ்தர்களாகக்கடமையாற்றுவர். நல்லூர் கந்தன் உற்சவஇறுதிநாளன்று பரிசுகள் வழங்கப்படும் இம்முறை 25-க்கும் மேற்பட்ட பரிசுகள் வழங்கப்படவுள்ளன.

... ...

# கச்சாயில் விளையாட்டுப் போட்டி

சாவகச்சேரி ஞாயிறு

கச்சாய் அரசினர் வித்தியாலயத்தின் முதலாவது இல்ல விளையாட்டுப் போட்டிகள், வித்தியாலய விளையாட்டரங்கில் நடைபெற்றன.

பிரதம விருந்தினராக வட மாநிலக் கல்வியதிபதி திரு. செ. சங்கரலிங்கமும், வடபிரதேசக் கல்வி ஆலோசகர் திரு. செ. கனகசபாபதியும் கலந்துகொண்டனர். வட்டாரக் கல்வியதிகாரி திரு. சந்தசாமி கொடியேற்றிவைத்துப் போட்டிகளை ஆரம்பித்துவைத்தார் போஷகராகச் சாவகச்சேரி தொகுதி எம் பி. திரு. வ ந நவரத்தினமும். கச்சாய் கிராமசபைத் தலைவர் திரு. சிதம்பரப்பிள்ளையும் கலந்து கொண்டனர். திருமதி இரகுபதி நவரத்தினம் பரிசில்களை வழங்கிஞர்.

மாதவி இல்லம் முதலாம் இடத்தையும் கண்ணகி இல்லம் இரண்டாம் இடத்தையும், மணிமேகலை இல்லம் மூன்ரும் இடத்தையும் பெற்றன.

பின்வருவோர் ஒவ்வொரு பிரிவிலும் இல்லச் சாம்பியன்களாஞர்கள்:

மேற்பிரிவு ஆண்: வே. யோகராசா, மாதவி இல்லம்.

மேற்பிரிவு பெண்: க. யோகம்மா, மணிமேகலை இல்லம்

கீழ்ப்பிரிவு பெண்: மா. [illegible], கண்ணகி இல்லம்.

[illegible] இல்ல அலங்காரத்[illegible]

# உ. கிழங்கு உத்தரவாத விலையை இரட்டிக்கவும்'

யாழ்ப்பாணம், ஞாயிறு

'இம்முறை யாழ். மாவட்டத்தில் 1500 ஏக்கர் நிலத்தில் உருளைக்கிழங்கு செய்கை பண்ணப்படவிருக்கிறது. சென்ற முறையிலும் பார்க்க கூடிய அளவு இம்முறை பயிரிடப்படுவதால் விவசாயிகள் அரசிடம் ஆலோசனையைப் பெற்று நல்ல முறையில் விருத்தி செய்யவேண்டும்'.

இவ்வாறு கோப்பாய் வடக்குப்பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் விசேஷ கூட்டம் ஒன்று கோப்பாய் சரவண பவானந்தா வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்றபோது யாழ் மாவட்ட விவசாய அதிபர் திரு. பொ. மாணிக்கவாசகம் பேசுகையில் கூறிஞர்.

வலி-கிழக்கு காரியாதிகாரி திரு வ கந்தப்பிள்ளை பேசுகையில் 'வெங்காயம், உருளைக்கிழங்கு ஆகியவற்றின் விலையையும், உற்பத்தியையும் கட்டுப்படுத்த திட்டம் வகுக்கும் இந்நேரத்தில் விவசாயிகள் உப உணவுப் பயிர்களான நிலக்கடலை, மிளகாய் போன்றவற்றை உற்பத்தி செய்து பயன் பெற வேண்டும்' என்ருர்

கூட்டுறவுப் பரிசோதகர் திரு கே. எஸ். பாலசுப்பிரமணியம் உட்படப் பலர் உரையாற்றினர். உருளைக்கிழங்கின் உத்தரவாத விலையை இரட்டிப்பாக உயர்த்தும்படி அரசைக் கோரும் தீர்மானம் ஒன்றும் இக் கூட்டத்தில் நிறைவேறியது.

இலங்கையில்

# சர்வதேச மலர் கண்காட்சி

கோட்டை, ஞாயிறு

சர்வதேச மலர்க்கண்காட்சியொன்று முதல் தடவையாக இலங்கையில் நடைபெறவிருக்கிறது.

இலங்கையில் நடைபெறவிருக்கும் இக்கண்காட்சியில் சில மேற்கத்திய நாடுகளும், கிழக்குநாடுகளும்பங்குபற்றுகின்றன. கண்காட்சி 1971ம் ஆண்டு ஜனவரி மாதம் இலங்கை உல்லாசப்பிரயாணிகள்சபை தலைமைக்காரியாலயத்தில் நடைபெறவிருக்கிறது.

இங்கிலாந்து. அவுஸ்திரேலியா, ஜப்பான், தாய்லாந்து ஜெர்மனி, மலேசியா, இந்தியா, சிங்கப்பூர் முதலிய நாடுகள் தங்கள் நாடுகளிலுள்ள மலர்வகைகளையும் மலர்ச்செடிகளையும் கண்காட்சிக்கு அளிக்கவுள்ளன.

இலங்கை மலர்ச்செடி பயிர்ச்செய்கைச் சங்கத்தினர் இக்கண்காட்சிக்குவேண்டிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக அமைச்சர், நிதியமைச்சர் ஆகியவர்களோடு மேற்படி சங்கம் கலந்தாலோசித்து இக்கண்காட்சிக்கான ஆரம்ப நடவடிக்கையை எடுத்துள்ளது.

— —

# புது ரக நெல்

அம்பன், ஞாயிறு

வடபகுதியில் நெல் உற்பத்தியைப் பெருக்கும் நோக்[illegible]

# 2 ரூபாவுக்கு 6மரக்கறிப் பொதி

கோட்டை, ஞாயிறு

ஆறுமரக்கறிகள் அடங்கிய ஐந்துருத்தல்பொதி இரண்டு ரூபாவுக்கு விற்கப்படுகிறது.

இதுகொழும்பில் பெறக்கூடியதாக தேசியசந்தையில் வசதிகள் செய்யப்பட்டுள்ளது.

தரமான கறிச்சரக்குகளையும் நியாயமான விலைக்கு விற்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

— —

# இட மாற்றம்

மாவிட்டபுரம், ஞாயிறு

சுன்ஞகம் பொலிஸ் நிலையத்தில் சார்ஜன்டாகக் கடமையாற்றிய திரு எஸ். பொன்னம்பலம் ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலயத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவருடைய இடத்துக்கு திரு எஸ். முனிதாசா என்பவர் இட மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.


—

# தாலியை தவற விட்டார்

உடுப்பிட்டி, ஞாயிறு

திருவிழா பார்த்துவிட்டு வீடு திரும்பிய பெண் ஒருவர் தனது 7 தங்கப்பவுண் எடையுள்ள தாலிக்கொடியை இழந்து கதறிய பரிதாப சம்பவம் [illegible]

# 26 ஆண்டு சேவை



யாழ்ப்பாணம், ஞாயிறு

இராமநாதன் கல்லூரியில் 26 ஆண்டுகாலம் ஆசிரியப் பணிபுரிந்த திரு. ப. இராமையா பணியிலிருந்துஒய்வு பெறுவது குறித்துப் பிரிவுபசார விழா நிகழ்ந்தது.

கல்லூரி அதிபர் திருமதி அருஞசலம் தலைமையில் நடந்த கூட்டத்தில் பலரும் பங்குபற்றினர்

இராமையாவின்பணியைப் பாராட்டிக் கூறிய அதிபர், இராமையா அவர்கள் சமஸ்கிருதத்தில் திருவிதாங்கூரில் "மகோ உபாத்தியாயர்" பட்டமும் சென்னைப் பல்கலைக்கழகத்தில் 'சிரோமணி' பட்டமும் பெற்றவர் என்ருர். அத்துடன் பி ஏ. பட்டம் பெற்றதையும் குறிப்பிட்டார்.

அவரதுகற்பித்தல்திறமை பற்றிக் குறிப்பிடும்போது, பேச்சு வழக்கில் இல்லாத மொழியைக் கற்பித்தல்சுலபமான காரியமன்று. ஆயினும் இராமையா அவர்கள் மிகக் குறைந்த காலத்திலே சமஸ்கிருதமொழி அறிவை கற்போர்க்கு வழங்கும் ஆற்றல் வாய்ந்தவர் அவரிடம் கற்ருேர் பலர் இன்று ஆசிரியர்களாக விளங்குகிருர்கள் என்ருர்.

திருமதி சண்முகலிங்கம், திருமதி சிவப்பிரகாசபிள்ளை ஆகிய ஆசிரியைகளும் மாணவிகளும் தொடர்ந்து பாராட்டுரை நிகழ்த்தினர்.

இராமையாவின் சிறப்பியல்புகள் அமைந்த பிரிவுபசாரப்பத்திரம் வாசித்துக் கொடுத்ததுடன் பொற்கிழியும் வழங்கினர்.

# கூட்டுறவு ஊழியர் பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம், திங்கள்

இலங்கை கூட்டுறவு ஊழியர் மகாசபை வடபிராந்தியப் பொதுக் கூட்டம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இம்மாதம் 23-ந் திகதி காலை நடைபெறவிருக்கிறது. மகாசபை பொதுக்காரியதரிசி வீரசேஞ விஜயசுந்தரா கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் இக்கூட்டத்தில் திரு. வி. [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Edward Judd,
Olinka Borova
in
THE VENGEANCE
OF SHE
(Color)

தினசரி 3 காட்சிகள்
ஜெய்சங்கர் — விஜயலட்சுமி
நடித்த
உயிர் மேல் ஆசை

ராணி
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
ஜெமினி — சௌகார்ஜானகி
நாகேஷ்—ஜெயந்தி
நடித்த
இரு கோடுகள்

வின்ஸர் 3-வது வாரம்
(யாழ்ப்பாணம்) * ராஜம் * புவனேந்திரம்
தினசரி 4 காட்சிகள் நடித்த
வெண்சங்கு

இப்பொழுது திரையிடப்படுகிறது!
கிங்ஸ்லி (கொழும்பு)
பிளாஸா (வெள்ளவத்தை)
வெலிங்டன் யாழ்ப்பாணம் திரைகளில்
தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி
(போயா, பிப்போயா காலை 10-30)



★ ஏ.வி.எம்.ராஜன்
★ சௌகார்ஜானகி
★ நாகேஷ் ★ குமாரிசச்சு
சாண்டோ எம். எம். ஏ. சின்னப்பதேவர்
★ கே. பி. சுந்தராம்பாள்
★ திருமுருக கிருபானந்தவாரியார்
மற்றும்பலர் நடித்த
'தெளிவில்லா இதயங்களைத் தெளியவைக்கும்
தெய்வத் தமிழ்க் காவியம்'

துணைவன்

கதை வசனம் பாலமுருகன்
சங்கீதம் K.V.மகாதேவன்
தயாரிப்பு: சாண்டோ M. M. A. சின்னப்பதேவர்

யில் இவ்வருடம் காலபோக நெல் விதைப்புத் தொடங்குவதற்கு முன்னதாக பயிற்சி வகுப்பொன்று சங்கானை விவசாய விஸ்தரிப்பு நிலையத்தில் நடைபெற்றது. பல கிராமங்களிலிருந்தும் கமக்காரர்கள் கலந்து கொண்டனர்.

வரண்ட பிரதேசத்தில் கூடிய விளைவைப் பெறக் கூடிய நெல் பற்றியும் இப்பகுதியில் கிட்டத்தட்ட 640 ஏக்கர் உவர்த்தறைகளை திருத்தி நெல் விளைவிக்கும் முறைகளைப் பற்றியும் மாவட்ட விவசாய அதிபர் திரு. பொ. மாணிக்கவாசகர் விவசாயிகளுக்கு விளக்கிக் கூறினர்.

## உற்சவம்

கொழும்புத்துறை, ஞாயிறு
அரியாலை ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் இம்மாதம் 20-ந் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 29-ம் திகதி தேரும் 30-ந் திகதி தீர்த்தத்துடனும் முடிவடையும்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### திங்கள் 17—8—70

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-15, இரவு 9-00)

**344 மீ. அன்ட் 61 மீ.**

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 கிறிஸ்தவ நற்சிந்தனை, 6-35 மெல்லிசை, 7-30 திரைகானம், 8-00 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

**344 மீ. அன்ட் 49 மீ.**

பகல் 12-00 தொழிலாளர் கேட்டவை, 1-00 கதம்ப இசை.

**344 மீ. அன்ட் 61 மீ.**

மாலை 4-25 கல்வி ஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள். 5-30 வளரும்பயிர்.

இரவு 6-00 இசைப்பயிற்சி, 6-30 கிராமியநிகழ்ச்சி, 7-00 வாத்தியஇசை, 7-15 பாட்டு, 7-45 செய்திச்சுருள், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-40 நாதஸ்வரம், 10-30 செய்தித் தொகுப்பு.

REGAL JAFFNA
Daily 4-45, 7 & 9-45p.m.
Poya, Pre poya 4 Shows
DON'T RAISE
THE BRIDGE
LOWER THE RIVER

...வட்டுக் காட்டை ஆகிய மூன்று இடங்களில் நூல் காட்சிகளை நடாத்தவுள்ளனர். ஒரே இடத்தில் பல் வகையான புத்தகங்களைப் பார்வையிட வைப்பதற்கான சகல ஒழுங்குகளையும் புலவர் நா சிவபாதசுந்தரன் கவனித்து வருகின்றார். காட்சி இம்மாத பிற்பகுதியில் நடைபெறும்.

மேற்பிரிவு பெண்: க. யோகம்மா, மணிமேகலை இல்லம்.

கீழ்ப்பிரிவு பெண்: மா. புவனேஸ்வரி, கண்ணகி இல்லம்.

இல்ல அலங்காரத்தில் மணிமேகலை இல்லம் முதலாவது இடத்தைப் பெற்றது.

# கொழும்புக்கு வெங்காயம் மீண்டும் ஏற்றுமதியாகும்

மாவிட்டபுரம், ஞாயிறு
யாழ்ப்பாணத்தில் இருந்து இம்மாதம் 19-ம் திகதிமுதல் வெங்காயம் கொழும்புக்கு ஏற்றுமதியாக விருக்கிறது. வடபகுதி விளைபொருள் உற்பத்தியாளர் சங்கம் செய்த பேச்சுவார்த்தையின் பின் இம்முடிவு பெறப்பட்டது.

யாழ்ப்பாணத்திலிருந்து வெங்காயத்தை கொள்வனவு செய்யும் கூட்டுறவு மொத்த விற்பனவு தாபனம் சென்ற ஒரு கிழமையாக யாழ்ப்பாணத்தில் இருந்து வெங்காயத்தை அனுப்ப வேண்டாம் என கோரியிருந்தது வெளிநாட்டில் இருந்து பம்பாய் வெங்காயமும் சின்ன வெங்காயமும் இறக்குமதி செய்யப்பட்டதாலேயே இத்தடை விதிக்கப்பட்டிருந்தது.

இத்தடையால் யாழ். மாவட்டத்தில் இருந்து அரசுபெற்ற 4000 அந்தர் வெங்காயத்தில் இம்முறை 1500 அந்தர் மட்டுமே பெறப்பட்டதால் விவசாயிகள் வெங்காயத்தை ஒன்றும் செய்யமுடியாது கஷ்டப்பட்டனர்.

இந்நிலையில் விவசாயிகளின் வெங்காயத்தை யாழ். நகரில் கொள்வனவு செய்யும் வடபகுதிவிளை பொருள் உற்பத்தியாளர் சமாசத்தின் செயலாளர் திரு. து. கணேஸ் கொழும்புக்கு உடன் சென்று கூ. மொ. வி. ஸ்தாபன அதிகாரிகளுடன் பேச்சு வார்த்தை நடாத்தியதின் பயனாக இம்மாதம் 19-ம் திகதி வெங்காயம் கொழும்புக்கு அனுப்படவிருக்கிறது.

இனி விவசாயிகள் எதுவித அச்சமும் கொள்ளத்தேவையில்லை கட்டாயம் வெங்காயம் கொழும்புக்கு அனுப்பப்படும் என மேற்படி சமாசத்தலைவர் திருஎன். ரி. சிவஞானம் தெரிவித்தார்.

## இடமாற்றம் ரத்து

வாழைச்சேனை, ஞாயிறு
கோறளைப்பற்றுக் காரியாதிகாரியாகக் கடமையாற்றிய திரு கே. சண்முகலிங்கத்தின் இடமாற்றம் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

மற்றும் செங்கலடிக் காரியாதிகாரி திரு. செல்வரத்தினம் மட்டக்களப்பு காரியாதிகாரி திரு வல்லிபுரம் ஆகியோரின் இடமாற்றங்களும் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

## உற்சவம் முடிந்தது

பண்டத்தரிப்பு, ஞாயிறு
இளவாலை மாரீசன் கூடலில் புனித கயித்தார் முனீந்திரர் ஆலயத்தில் நடைபெற்றுவந்த தேவதாயின் ஆரோகணத்திருநாள் 15-ம் திகதியுடன் முடிவடைந்தது.

சில்லாலை புனித கதிரை மாதா ஆலய உற்சவமும் 15-ம் திகதியுடன் முடிவடைந்தது.

## நியமனப்பத்திரம் இன்று தாக்கல்

மாவிட்டபுரம், ஞாயிறு
மல்லாகம் கிராமசபை 4-ம்வட்டார உபதேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் இன்று 17-ம் திகதி தாக்கல் செய்யப்பட விருக்கிறது. கிராமசபை மண்டபத்தில் வைத்து அதிகாரியால் பத்திரங்கள் ஏற்கப்படும். இவ்விடைத் தேர்தலில்கட்சி அடிப்படையில் சிலர் போட்டியிடுவதாகத் தெரிகிறது.

## திருட்டு

சங்கானை, ஞாயிறு
சண்டிலிப்பாய் சங்கானை வீதியில் 7ம் கட்டையடியிலுள்ள தேநீர்க்கடை யொன்றில் உட்புகுந்த இனந்தெரியாதநபர்கள் அங்கிருந்த பொருட்களையும் பணத்தையும் களவாடிச் சென்றுள்ளதாக பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது. சங்கானை பொலிசார் புலன் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

## புது ரக நெல்

அம்பன், ஞாயிறு
வடபகுதியில் நெல் உற்பத்தியைப் பெருக்கும் நோக்குடன் கடும் வரட்சியிலும் விளையக்கூடியதான புதுரக நெல்லினமான 'பினுலொட்' 'டிக்வீ' என்னும் நெல்லை யாழ் மாவட்ட விவசாய விரிவாக்கப் பகுதியினர் வரவழைத்துள்ளனர். இப்புதிய ரகநெல் ஏக்கருக்கு 75 புசலுக்கு குறையாமலும் 4 மாத காலத்திலும் விளையக் கூடியதாம்.

உடுப்பிட்டி, ஞாயிறு
திருவிழா பார்த்துவிட்டு வீடு திரும்பிய பெண் ஒருவர் தனது 7 தங்கப்பவுண் எடையுள்ள தாலிக்கொடியை இழந்து கதறிய பரிதாப சம்பவம் கரணவாய் வடக்கு மூத்தவிநாயகர் கோவிலில் நிகழ்ந்தது.

கரணவாய் தெற்கைச் சேர்ந்த நாகர் கோவில் தபால் சேவகர் ஒருவரின் மனைவியே தாலிக்கொடியை இழந்தவராவர் தாலிக் கொடியின் கொழுக்கி கோவிலுக்கு அருகிலுள்ள வீதியில் தேடுதலின்பின் கண்டெடுக்கப்பட்டது.

பத்தில் இம்மாதம் 23-ந் திகதி காலை நடைபெறவிருக்கிறது. மகாசபை பொதுக்காரியதரிசி வீரசேன விஜயசுந்தரா கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் இக்கூட்டத்தில் திரு. வி. பொன்னம்பலம் சிறப்புரை நிகழ்த்துவார்.

மன்னார், வவனியா, பரந்தன், யாழ்ப்பாணப் பகுதி கூ. அ உ. ஆணையாளர்கள், உதவி தொழில் அதிபர், மன்றப் பிரமுகர்கள் இக்கூட்டத்தில் கலந்துகொள்வர். 20-ந் திகதிக்கு முன்னர் பிரேரணைகள் கோரப்பட்டுள்ளன.





ஒரே முறையில் 3 கலன் தெளிக்கிறது.
ஹேஸ்ப்ரே 300 பி. ரி.

தட்டி விட்டதும் இயங்கும் சுலபமான விசையுடைய பீச்சு முனை கொண்டது.

பீச்சு முனையில் தட்டிவிட்ட மாத்திரத்தில் இயங்கும் புதிய தடுப்பு விசை உள்ளதால் வெளியே சிவிறப்படும் மருந்தின் அமுக்கத்தை குறைந்த அளவிலிருந்து கூடுதலான அளவுக்குக் கட்டுப்படுத்த ஏதுவாக்குகிறது. இது விசேஷமாக தேயிலையில், பயிர்களுக்குச் சேதம் விளையும் என்ற பயமில்லாமல் களைக் கொல்லிகளை தெளிக்கப் பயன்படுகிறது.

துரு தடுப்புப் பித்தளையில் உருவான 300 பி. ரி. பீச்சுக் குழாய் இரட்டை முனைகளைக் கொண்டுள்ளது. இதனால் மருந்தை அகன்ற பரப்பளவிற்கு தெளிக்கலாம். அத்துடன், இடப்பக்கம் அல்லது வலப்பக்கம் இயக்குவதற்கு, சுழற்றக்கூடிய ஒரு நெம்புகோலும் உண்டு.

உதிரிப்பாகங்கள் எப்போதும் கிடைக்கும்.

VISION 74/70

தயாரிப்போர்:
ஹேலீஸ் லிமிட்
400, டீன்ஸ் ரோட்,
கொழும்பு 10.
தொலைபேசி: 96331

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்காசிய அமைதியில் இஸ்ரேலுக்குச் சந்தேகம்

## ரஷ்ய ஏவாயுத நடமாட்டம் சம்பந்தமாக புதிய பிரச்னை

டெல் அவிவ், ஆகஸ்ட் 16

மேற்காசிய அமைதி முயற்சிகள் பலனளிக்குமா என்பதில் இஸ்ரேலுக்கு இப்பொழுது பெரிதும் ஐயப்பாடு தோன்றியுள்ளது. இதனால் மேற்காசிய அமைதிக்கு அமெரிக்கா தெரிவித்த யோசனைகளே அர்த்தமற்றவையாகிவிடக்கூடும் என்று கருதப்படுகின்றது.

மேற்காசியாவில் சோவியத் யூனியன் ஏவாயுதச் சாதனங்களைப் பெருமளவில் கொ ுவந்து சேர்த்திருப்பதாக வெளியாகியுள்ள செய்திகளைத் தொடர்ந்து இஸ்ரேல் இந்த அச்சத்தை வெளியிட்டிருக்கின்றது.

மேற்காசியாவில் போர் நிறுத்தம் ஏற்படுவதற்கு அமெரிக்காவே முதலில் யோசனை தெரிவித்தது. அதனால் போர் ஓய்வுக்கு முன்பு இருந்த நிலைமையை மேற்காசியாவில் ஏற்படுத்துவதற்கு அமெரிக்காதான் முயற்சி எடுக்கவேண்டும். அதே சமயம் தேவையான ஆயுதங்களையும் இஸ்ரேலுக்கு அமெரிக்கா கொடுக்கவேண்டும் என்று இஸ்ரேல் தெரிவித்திருக்கின்றது. இந்தப் பிரச்னையில் திருப்திகரமான உத்தரவாதம் கிடைக்கும் வரைக்கும் ஐ நா பிரதிநிதி டாக்டர் ஜாரிங்குடன் இஸ்ரேல் தொடர்பு வைத்துக்கொள்ள மறுத்துவிடும் என்றும் கருதப்படுகின்றது.

பேச்சுவார்த்தைகளை நியூயோர்க்கில் வைத்துக்கொள்ளலாம் என்று அரபு நாடுகள் தெரிவித்திருப்பதுபற்றியும் இஸ்ரேல் அதிருப்தி தெரிவித்திரு கின்றது.

இதேசமயம் மேற்காசியாவின் பல இடங்களில் மீண்டும் மோதல்கள் ஏற்பட்டு வருவது பற்றிய செய்திகள் கிடைத்துக் கொண்டிருக்கின்றன.

லெபனானின் தென்பகுதியில் நேற்று இஸ்ரேலியர் ஊடுருவல் செய்து இரண்டு அரபுக்களைக் கடத்திச்சென்றதாகவும் மூன்று வீடுகளைக் கொளுத்திவிட்டதாகவும் கூறப்படுகின்றது.

லெபனானில் முன்பு தடைவிதிக்கப்பட்டிருந்த பல அரசியல் கட்சிகளுக்கு மீண்டும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. லெபனான் அதிபர்தேர்தல் அடுத்த திங்கட்கிழமை இ ம் பெறவிடுக்கின்றது இதில் மூவர் போட்டியிடுகிறார்கள்.

சமீபத்தில் எகிப்திய பிராந்தியத்தில் சுட்டு வீழ்த்தப்பட்ட விமானத்தின் சாரதி இஸ்ரேலியரிடம் திருப்பிக் கொடுக்கப்பட்டுள்ளார்.

---

இளம் பெண் காரணம்

## சினிமாத்தியேட்டர் குழப்பத்தில் ஒருவர் கொலை: பலருக்கு காயம்

சிலாபம், ஞாயிறு

புத்தளத்தில் சினிமாத் தியேட்டர் ஒன்றில் ஏற்பட்ட மோதலில் ஒருவர் கொல்லப்பட்டதாக செய்தி கிடைத்திருக்கின்றது

இந்த மோதல் காரணமாக மேலும் பலர் காயங்களுக்குள்ளாகி ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சினிமாத் தியேட்டரில் படம்பார்க்க வந்த இளம்பெண்ணின் காரணமாக ஏற்பட்ட தகராறு நீண்டதினால் நகரில் பெரிய போராட்டமே நடந்ததாகக் கூறப்படுகின்றது.

இந்த மோதலில் 30 வயதான அப்துல் கபூர் ஜானுத்தீன் என்பவரே மரணமானவர். கத்திக் குத்துக்களுக்கும் பொல்லடிகளுக்கும் இலக்கான பலர் ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்,

இச் சம்பவம்சம்பந்தமாக கைது செய்யப்பட்ட ஒருவர் பொலிஸ் பாதுகாப்புடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

---

## 'வாயுமெத்தை வாகனம் தீவுப்பகுதிக்கு உகந்தது!

அமைச்சரிடம் அறிக்கை சமர்ப்பிக்கப்படும்

---

## பிரதமர் பிரான்ஸ் பயணம்

கோட்டை, ஞாயிறு

பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயகா மிகவிரைவில் பிரான்ஸுக்குச்செல்லவிருக்கிறார். ராஜாங்க விருந்தினராகச் செல்லும் பிரதமருடன் உள்நாட்டு, உள்ளூராட்சி அமைச்சர் திரு. பிலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகாவும் செல்லுவார்.

சாம்பியா மகாநாட்டில் கலந்துகொண்டு திரும்புகையில் பிரதமர் பிரான்ஸ் செல்வார்.

---

## 5வயதுச் சிறுவனை கொலைசெய்ததாக

---

## காமன்வெல்த் ஆசிரியர் குழு

யாழ்ப்பாணம், திங்கள்

காமன்வெல்த் நாடுகளைச் சேர்ந்த ஆசிரியர் குழுவினருக்கு யாழ்ப்பாண இந்துக் கல்லூரியில் தேநீர் விருந்தளிக்கப்பட்டது.

திரு. அ. மகாலிங்கசிவம் இத் தேநீர் விருந்து வைபவத்துக்குத் தலைமைவகித்தார்.

எட்டுப்பேர்கொண்ட இந்த வெளிநாட்டு ஆசிரியர் குழுவில் ஆறு பேர் பெண்மணிகளாவர் அவர்களுள் ஒருவர் தேநீர் விருந்தின் போது உரையாற்றினார் ஆசிரியர்கள் உரிமைகள் தொழில் நிலை இவைபற்றிய கலந்துரையாடலும் நடைபெற்றது.

---

## யுத்தகால கிணறுகள்

கோட்டை, ஞாயிறு

இரண்டாவது உலகமகா யுத்தத்தின் போது திருக்கோணமலையில் பிரிட்டிஷ் கடற்படையினரின் பாவனையிலிருந்த பழைய 13 கிணறுகளை புனரமைப்புச் செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இக்கிணறுகளைப் புனரமைப்புச்செய்த பின்னர் உபஉணவு பயிர்வளர்ச்சிக்கு பயன்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

புனரமைப்புப் பணியில் கப்பற்படையினரும் உதவுவதற்கு முன்வந்துள்ளனரெனத்தெரிகின்றது.

---

அம்பன் ஆஸ்பத்திரி

## நோயாளர் கஷ்டம்

அம்பன், ஞாயிறு

அம்பன் அரசினர் வைத்தியசாலையில் மருந்தெடுக்க வரும் வெளிநோயாளர்கள் மருந்தெடுக்க வந்த நேரம் தொட்டு மருந்தெடுத்துப் போகும்வ [illegible] நிலத்தில் அல்லது [illegible]

---

## 'வளர்ச்சிக்கு உதவுங்கள்'

தாவடி, ஞாயிறு

''சிறந்த கட்டிட வசதியுடன் ஆரம்ப கல்வியைக்கற்கக்கூடிய சிறந்த பாடசாலையும், திறமைமிக்க நல்லாசிரியர்களும் இங்கிருக்கிறார்கள். எனவே இச் சூழலில் வதியும் பெற்றோர்யாவரும் தங்கள் சிறார்கள்யாவரையும் இவ்வித்தியாலத்திலேயே அனுப்பிப் பாடசாலையை நன்கு வளர்க்க உதவ வேண்டும்''.

இவ்வாறு, கொக்குவில் ஸ்ரீஞானபண்டித வித்தியாசாலைதலைமையாசிரியர்திரு. த தருமலிங்கம் தாம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் கூறியுள்ளார்.

---

## இ போ ச தலைவருக்கு மகஜர்

சுழிபுரம், ஞாயிறு

சுழிபுரம் பஸ் பிரயாணிகள் சங்கத்தினர் இ போ ச தலைவருக்கு அனுப்பிய மகஜரொன்றில் கடந்த மூன்று தினங்களுக்கிடையில் ஏற்பட்ட இரண்டு சம்பவங்களைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளனர் குடித்துவிட்டுக் கடமையாற்றிய பஸ் ஊழியர் ஒருவரின் தகாத வார்த்தைப்பிரயோகங்களால் பஸ் பிரயாணிகள் அடைந்த கஷ்டங்கள் பற்றிக் குறிப்பிட்டு இனிமேலும் இம்மாதிரிச்சம்பவங்கள் நேராமல் பார்த்துக்கொள்ளுமாறும் மகஜரில் கேட்கப்பட்டுள்ளதாம்.

---

## வடமராட்சியில் இளம்பிள்ளைவாத தடுப்புமருந்து

அம்பன், ஞாயிறு

பருத்தித்துறைப் பகுதி சுகாதார வைத்திய அதிகாரியின் பிரிவிலுள்ள 2மாத சிசுக்கள் தொடக்கம் 5வயதுவரை பாலர்வரை போலியோத் தடைமருந்து கொடுக்கும் இயக்கம் 1வது தடவையாக இன்று தொடக்கம் 30ந்திகதிவரையும் நடைபெறும்.

2 வது தடவையாக ஐப்பசிமாதம் 8ந் திகதி தொடக்கம் 21ந்திகதிவரையும் நடைபெறுமெனவும், பொதுமக்களையும் அவ்வப்பகுதி கிராமசபை வட்டார உறுப்பினர்களையும் ஒத்துழைக்கும்படியும் பருத்தித்துறைப் பகுதி சுகாதார வைத்திய அதிகாரி [illegible]. கே புவிராசசிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

---

## [illegible]துறைக்கு நவீன சந்தை

---

## 'அதிக பஸ்களை ஈடுபடுத்துக'

யாழ்ப்பாணம், திங்கள்

காரைநகர் 'ஈழத்துச் சிதம்பரம்' ஆலய மண்டலாபிஷேக நாளான இம்மாதம் 22-ம் திகதி இப்பகுதிக்கு விசேஷ பஸ் சேவைகளை நடத்துமாறு கோரி யாழ்ப்பாணம் - காரைநகர் பஸ் பிரயாணிகள் சங்கம் இ. போ. ச. முகாமையாளருக்கு மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு பஸ் சேவைகளையும் விஸ்தரிக்குமாறு மகஜரில் கேட்கப்பட்டுள்ளது.

(கு. வி. ம.)

---

## கற்கோவளம் பால் நிலையத் திறப்புவிழா

யாழ்ப்பாணம், ஞாயிறு

பருத்தித்துறை கற்கோவளத்தில் புதிய பால் நிலையம் ஒன்று திறக்கப்பட்டது.

பொறுப்பாளர் திரு ஜோர்ஜ் பேசுகையில் பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

விழாவில் வந்திருந்த குழந்தைகளுக்கு பால் வழங்கப்பட்டது.

---

வேலை கிடைத்த 3-ம் நாள்

## பணத்தைசுருட்டிக்கொண்டு கடையிலிருந்து மறைந்தாராம்.

பூநகரி, ஞாயிறு

வேலைதேடிவந்த இளைஞர் ஒருவர் கடையில் சேர்ந்து 3 தினங்களில் அக் கடையிலுள்ள பெறுமதிவாய்ந்த பொருட்களையும் ரொக்கத்தையும் சுருட்டிக் கொண்டு தலைமறைவாகி விட்டாராம். கிளிநொச்சி யாழ்ப்பாணம் கிராமசேவகர்களிடத்தில் பூநகரி வாடியடியைச் சேர்ந்த பிரஸ்தாப கடைச் சொந்தக்காரரான அரியரத்தினம் என்பவர் இவ்வாறு புகார் செய்துள்ளார். ஆளைத்தேடும் முயற்சியில் பொலிஸார் ஈடு பட்டுள்ளனர்.

வேலையெதுவுமில்லை யென்றும், ஏதாவது வேலை தந்து உதவுமாறும் தம்மிடம் வந்த பிரஸ்தாப 22 வயது இளைஞர்களுக்கு இரங்கிச் சமையல் வேலை செய்ய முடியுமா என தேநீர்க் கடைக்காரரான அரியரத்தினம் கேட்டதற்கு இளைஞர் சம்மதித்து வேலைபார்த்து வந்ததாயும், வேலையில் சேர்ந்த மூன்றுதினங்களில்கடையிலுள்ள 1200 ரூபா பெறுமதியான றேடியோவையும், மணிக்கூடு ஒன்றையும் மற்றும் கடையிலிருந்த ரொக்கப்பணம் முழுவதையும் இரவோடிரவாக அவர் அபேஸ் செய்துகொண்டு தலைமறைவ கிவிட்டதாயும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## திடீர் திடீர் எனதடையாகும் மின்சார விநியோகம்!

வல்வெட்டித்துறை ஞாயிறு,

வல்வெட்டித்துறையிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் மின்சார விநியோகம் இரவுநேரங்களில் திடீர் திடீரென நின்று விடுகின்றது. சிலசமயங்களில் மின்சார வெளிச்சம் மோசமான நிலையிலுள்ளது.

இது சம்பந்தமாக வல்வெட்டித்துறை நகரசபை அங்கத்தவர் ஒருவரிடம் விசாரித்ததில், மின்சார இலாகாவுக்கு ஒரு லட்சம் ரூபாய்வரை நகரசபை கொடுக்க வேண்டியிருக்கிறதென்றும், இதனால்மின்சார விநியோகத்திற்கு வல்வெட்டித்துறையிலுள்ளஒரு 'டிரான்ஸ்போமரை' மின்சார இலாகாவினர் எடுத்துவிட்டனர்என்றும், இதனாலேயே மின்சாரம் நல்ல முறையிலே வழங்கப்படாதிருப்பதாகவும் தெரிவித்தார்.

இரவு நேரங்களில் மந்தமான மின்சார விநியோகத்தினால் பள்ளி மாணவர்கள் படிக்க முடியாதும், பொதுமக்கள் தமது வேலைகளைச் செய்ய முடியாமலும் பலவிதமான கஷ்டத்துக்குள்ளாகின்றனர்.

---

## மின்சார விநியோகம் கவனிக்க ஒரு மத்தியசபை!

கோட்டை, சனி

மின்சாரம் சம்பந்தமான நடவடிக்கைகளைக் கவனித்துக்கொள்வதற்கென ஒரு மத்தியசபையை மின்சார நீர்ப்பாசன அமைச்சர் நியமிக்கவிருக்கிறார்.

இந்தச் சபை மின்சார அமைச்சின் நேரடி நிர்வாகத்தில் இயங்குமென்றும், நாடு முழுதும் மின்சார விநியோகம் ஒழுங்காக நடைபெறுவதற்குச் சபை பயன்படுமென்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றங்களில் மின்சார விநியோகத்தினால் ஏற்படும் சிக்கேடுகளை அகற்றவும், வசதிகளை ஏற்படுத்தவும் இச்சபை பயன்படுமென்றும், மின்சார விருத்திக்கான நடவடிக்கைகளுக்கு உலக வங்கியின் உதவியும் பெறப்படுமென்றும் அமைச்சர் தெரிவித்தார்.

---

## அச்சுவேலிக்கு புதிய பஸ் சேவை

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணத்திலிருந்து ராஜவீதிவழியாக அச்சுவேலிக்கு புதியதொரு பஸ் சேவை இன்று முதல் நடைபெறுகிறது.

நல்லூர், முடமாவடிச் சந்தி, இருபாலைச் சந்தி, கோப்பாய், நீர்வேலி, நவக்கிரி, தோப்பு ஊடாக இந்த பஸ் அச்சுவேலிவரை செல்லும்.

நாளாந்தம் யாழ்ப்பாணத்திலிருந்து 7 சேவையும், அச்சுவேலியிலிருந்து 7 சேவையும் நடைபெறுகிறது

---

"அறுவடை காலங்களில்

---

நிலப்பறி

## 6,600 பேர் கைது

சென்னை, ஆகஸ்ட். 16

நிலப்பறிஇயக்கம்சம்பந்தமாக தமிழ் நாட்டில் இதுவரை 6,600 வலதுசாரி கம்யூனிஸ்ட்டுகள் கைது செய்யப் பட்டுள்ளனராம். எனினும் எவ்வளவுபேர்கைதாகியிருக்கிறார்கள் என்பதுபற்றி அதிகாரபூர்வமான தகவல் கிடைக்கவில்லை.

---

## சனசமூகநிலைய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

இணுவில் ஸ்ரீ கணேசா சனசமூகநிலையத்தின் பொதுக் [illegible]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 'வாயுமெத்தை வாகனம் தீவுப்பகுதிக்கு உகந்தது!

## அமைச்சரிடம் அறிக்கை சமர்ப்பிக்கப்படும்

லண்டன், ஆகஸ்ட். 16
'இலங்கையில் தீவுப் பகுதியில் நிலவிவரும் போக்குவரத்துக் கஷ்டங்களை அறவே நீக்க வேண்டுமானால், அப் பகுதிகளில் போக்குவரத்துக்கு 'வாயுமெத்தை வாகனங்களை' சேவையில் ஈடுபடுத்த வேண்டும். காற்றுமெத்தையில் மிதந்தபடி நீரிலும், நிலத்திலும், கரடு முரடான தரையிலும் அதிவேகமாகச் செல்லக்கூடிய இந்த அற்புத வாகனத்தை இலங்கைக்கு இறக்குமதி செய்து, இப் பகுதி மக்களின் கஷ்டத்தை நீக்கமுடியும். நான் இலங்கை திரும்பியதும் இது பற்றி நீர்ப்பாசன மின்சக்தி அமைச்சருக்கு அறிக்கை சமர்ப்பிப்பேன்.

இவ்வாறு அரசாங்க பெருவீதிப் பிரிவின் உதவி அதிபராகக் கடமையாற்றும் திரு. திசவீரசிங்கம் லண்டனில் நேற்றுக் கூறினார். திரு திசவீரசிங்கம் மற்றைய இரு அரசாங்க அதிகாரிகளுடன் தற்சமயம் பிரிட்டனில் சுற்றுப் பிரயாணம் செய்து வருகிறார். இலங்கை மின்சார சபையைச் சேர்ந்த பொறியியல் நிபுணர் திரு. ஜே. எக்ஸ். பிலிப்ஸ், நீர்ப்பாசனப் பொறியியலாளர் திரு. சி. டபிள்யூ. ஏ. ரேய் ஆகியோரே மற்றைய இருவருமாவர்.

பிரிட்டிஷ் வெளிவிவகார சாம்ராஜ்ய காரியாலயத்தின் விருந்தினராக ஒரு மாதகால சுற்றுலா வை மேற்கொண்டுவரும் இவர்கள் பிரிட்டனின் வீதிநிர்மாணமுறை, மின்சார உற்பத்தி, மற்றும் பல்வேறு ஆராய்ச்சித் துறைகளையும் நேரில் சென்று பார்வையிட்டனர். வாயுமெத்தை வாகனத்தை சென்ற வாரம் சவுதாம்டன் நகரில் வைத்து இவர்களுக்கு இயக்கிக் காண்பிக்கப்பட்டது.

பிரிட்டிஷ் வர்த்தக சபை, பிரிட்டிஷ் போக்குவரத்து அமைச்சு, வீதி ஆராய்ச்சி ஆய்வுகூடம், மத்திய மின்சார உற்பத்திசபை, வீதி நிர்மாணப்பிரிவு, மின்சார தொழில் இணைப்புப் பிரிவு, வாயுமெத்தை வாகன கூட்டுத்தாபனம் ஆகியவற்றிற்கும் பல கைத்தொழில் நிலையங்களுக்கும் இவர்கள் விஜயம் செய்தனர்.

'இது ஒரு ஆராய்ச்சி சுற்றுலாவாக அமைந்தது. தொழிற்சாலைகள், மின்சக்தி நிலையங்கள் ஆகியவற்றிற்கும் சென்று அங்கு எவ்விதம் வேலைகள் நடைபெறுகின்றன என்பதை நேரில் கண்டுகொண்டோம். அத்துடன் ஆராய்ச்சி நிறுவனங்களுக்கும் விஜயம்செய்து பல்வேறு துறைகளில் எவ்விதம் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதையும் பார்வையிட்டோம்' என்று திரு. திசவீரசிங்கம் சொன்னார்.

...கலந்துகொண்டு திரும்புகையில் பிரதமர் பிரான்ஸ் செல்வார்.

## 5வயதுச் சிறுவனை கொலைசெய்ததாக வழக்கு

நீர்கொழும்பு. ஞாயிறு
சத்தம் ஒன்று கேட்டபோது ஜன்னல் வழியாகப் பார்த்தேன் ரோசனா கையில் இரும்புக் கம்பியொன்றை வைத்திருந்தார் என்று திவலப்பிட்டியாவைச் சேர்ந்த ஏச் விமலசேன சாட்சியமளிக்கையில் கூறினார்.

நீர்கொழும்பு மாஜிஸ்திரேட் திரு பீ. பிரம்புக்வெல்ல முன்னிலையில் இக்கொலை வழக்கு விசாரணை நடைபெற்றது

72 வயது வயோதிபமாது ரோசனா என்பவர் 5 வயது சிறிபாலா என்ற சிறுவனை இரும்புக் கம்பியால் தாக்கி கொலை செய்ததாக இவ்வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது,

கொலை கொலை என்ற சத்தமும் அந்த அறையிலிருந்து வந்தது. இரத்த வெள்ளத்தில் குழந்தை கிடந்தது' என்றும் விமலசேன தமது சாட்சியத்தில் கூறினார்.

வழக்கு விசாரணை நாளை தொடர்ந்து நடைபெறும்.

## பரிசு பெற்றனர்

ஊர்காவற்றுறை. ஞாயிறு
சரவணை சைவ இளைஞர் மன்ற ஆதரவில் நடைபெற்ற சுந்தரர் குருபூசைத்தின மாணவர் பேச்சுப் போட்டியில் செல்வி மு. குலமணி, பி. தேவதாசன், சி. குகானந்தன் ஆகியோர் பரிசுகளைப் பெற்றனர்.

...சாலையில் மருந்தெடுக்க வரும் வெளிநோயாளர்கள் மருந்தெடுக்க வந்த நேரம் தொட்டு மருந்தெடுத்துப் போகும்வரையும் நின்றநிலையில் நிற்கவேண்டும். அல்லது நிலத்தில் அல்லது சுவர்க் கட்டுகளில் தான் இருக்கவேண்டும். ஏனெனில் இங்கு வரும் வெளிநோயாளர்கள் இருப்பதற்கு ஒரே ஒரு வாங்குதான் போடப்பட்டிருக்கின்றது. இதனால் இங்கு மருந்தெடுக்க வரும் பெரும்பாலான நோயாளிகள் மேற்படி கதிக்கு ஆளாகின்றனர். இக் குறையை நீக்கி போதியளவு வாங்குகள் நோயாளிகள் வசதிக்கேற்ப போடுவதற்கு விரைவில் ஒழுங்கு செய்யப்பட வேண்டுமெனக் கேட்கும் மகஜரை கிழைக்கரை அபிவிருத்தி முன்னணியினர் சுகாதார சேவை அத்தியட்சகரிடம் சமர்ப்பித்துள்ளனர்.

வைத்திய அதிகாரி ....கே புவிராசசிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## பருத்தித்துறைக்கு நவீன சந்தை

பருத்தித்துறை, ஞாயிறு
பருத்தித்துறையில் தற்போதுள்ள சந்தையில் நிலவும் இடநெருக்கடி பல்வேறு வசதியீனங்கள் மாழைகாலத்தில் மக்கள் படும் கஷ்டங்கள் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு ஒரு புதிய சந்தையை நவீன முறையில் உருவாக்க அரசாங்கம் ஒரு லட்சத்து நாற்பதினாயிரம் ரூபா ஒதுக்கியுள்ளது இப்பொழுது சந்தைக்குள் கடைகள் வைத்திருப்பவர்களுக்கென சந்தைக்குள்ளேயே சிறு கட்டிடங்கள் அமைக்கப்படுமெனத் தெரிகிறது.

...தவும் இச்சபை பயன்படுமென்றும், மின்சார விருத்திக்கான நடவடிக்கைகளுக்கு உலக வங்கியின் உதவியும்

...நாளாந்தம் யாழ்ப்பாணத்திலிருந்து 7 சேவையும், அச்சுவேலியிலிருந்து 7 சேவையும் நடைபெறுகிறது

## "அறுவடை காலங்களில் வெங்காய இறக்குமதியை கட்டுப்படுத்த வேண்டும்"

யாழ்ப்பாணம், திங்கள்
"யாழ்ப்பாணத்தில் சின்ன வெங்காயம் அறுவடைசெய்யும் நேரத்தில் பம்பாய் வெங்காயம், சின்ன வெங்காயம் இறக்குமதி செய்வது பொதுவாக இலங்கையின் பொருளாதாரத்தைச் சீர்குலைக்கும் பணியில் ஈடுபடுவதாகும். அத்துடன் யாழ்ப்பாண விவசாயிகளின் பொருளாதாரத்தை விரயம் செய்வதுமாகும். தொடர்ந்து வருங்காலத்தில் வெங்காயப் பயிரில் நாட்டம் கொள்ளாது விடுவார்கள். இதனால் இலங்கையில் செலாவணிக் கட்டுப்பாடு நீங்கி, வெளிநாடுகளுக்கு வெங்காயம் இறக்குமதி செய்வதற்கு அநேக பணத்தொகையை அரசாங்கம் செலவிட வேண்டிவரும்.

எனவே இன்றைய அரசாங்கமும், அமைச்சரும் இந்த விடயத்தில் கவனம் செலுத்த வேண்டியது கடமை.

இந்நேரத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் விவசாயிகளின் கஷ்டத்தை எடுத்துக்கூறாமல் இருப்பதைக் கண்டு மக்கள் வருந்துகிறார்கள்."

உடுவில் கிராமசபைத் தலைவர் திரு. ச முத்துலிங்கம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

"எனவே, விவசாயிகளின் நன்மையை முன்னிட்டு அரசாங்கம் அறுவடை காலங்களில் வெங்காய இறக்குமதியை முற்றாகக் கட்டுப்படுத்தவேண்டும்" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## சனசமூகநிலைய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், ஞாயிறு
இணுவில் ஸ்ரீ கணேசா சனசமூகநிலையத்தின் பொதுக்கூட்டம் நிலைய வண்டபத்தில் நிலையத் தலைவர் திரு. கே. கதிரவேல் தலைமையில் நடைபெற்றது. தலைவர் தமது தலைமையுரையில் நிலையத்தின் வளர்ச்சியையும் அதன் பலாபலன்களையும் விளக்கினார்.

மாணவர்களுக்கு விஷேசமாக ஊக்கமளிக்கவேண்டுமென்றும், ஒவ்வொரு துறையினம் விழாக்கள் கொண்டாட வேண்டுமென்றும், தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

நடப்புவருட உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

போஷகர்: திரு. நா. முத்துலிங்கம், தலைவர்; திரு. க. கதிரவேல், உபதலைவர்கள்: திரு. நா. சின்னராச, திரு. த. தர்மலிங்கம், செல்வன் சி. பஞ்சாட்சரம் காரியதரிசிகள்: திரு. அ ஜெயபாலரத்தினம், திரு. நா. ச. யோகீஸ்வரன், தனாதிகாரி: திரு. செ. தண்டாயுதபாணி, உபதனாதிகாரி: திரு. க. கார்த்திகேசு, வாசகசாலைப் பொறுப்பாளர்கள்: செல்வன் ந. சண்முகப்பிரபு, செல்வன் பொ. அருட்பிரகாசம் செல்வன் க. இளமுருகன் கணக்குப் பரிசோதகர்: இ. பொன்னுத்துரை.

நிர்வாகசபையொன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

## "சோஷலிஸ அடிப்படையில் புதிய பொருளாதார மாற்றம் ஏற்படவேண்டும்!"

### — வட்டு எம். பி.

சங்கானை, ஞாயிறு
'மொழிப்பிரச்னை, சமயப் பிரச்னை, நிர்வாகப் பிரச்னை போன்றவைகளால் எமது நாட்டு வளர்ச்சியில் தடை ஏற்படுகின்றது. இவை போன்றவைகளிலிருந்து நாம் விடுவிக்கப்படுவதற்கு சோஷலிஸ அடிப்படையில் புதிய பொருளாதார மாற்றம் ஏற்பட வேண்டும். மாகாணரீதியாக குடிசைத் தொழில் போன்றவைகள் பெருகுவதுடன் அவ்வப்பகுதியில் உள்ள மூலப் பொருட்களைக் கொண்டு தொழிற்சாலைகள் உருவாக்கப்படுவதால் எமக்குத் தேவையான பல பொருட்கள் கிடைக்கக் கூடியதாக அமையும். அத்துடன் அந்நிய செலாவணியில் அதிகமான பணத்தையும் மிச்சப்படுத்த முடியும்

மேற்கண்டவாறு வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. தியாகராசா நேற்று சங்கானை பட்டினசபை முன்றலில் திரு. அ. சின்னையா தலைமையில் நடைபெற்ற சோஷலிஸ கருத்தரங்கில் பேசுகையில் குறிப்பிட்டார்.

மேலும் திரு. தியாகராசா தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:

மக்கள் யந்திரமின்றி நேரத்தை வீண்போக்காது வேலை செய்தால் அவர்களின் வேலையாய்ப்புடன் வறுமையும் நீங்கும் என்று அறிஞர் ஒருவர் கூறுகிறார். இந்திய ஜனாதிபதி திரு. வி. வி கிரியும் இதையே வலியுறுத்தியுள்ளதுடன் மக்கள் ஆக்கவேலைகளில் ஈடுபடுவதால் சமுதாயம் மேலோங்க வாய்ப்பு ஏற்படும் என்றும் கூறுகிறார். எனவே நாம் அரசாங்கத்துடன் ஒத்துழைப்பதால் சோஷலிஸ அடிப்படையில் தீர்க்க வேண்டிய பிரச்னைகளை தீர்த்துக்கொள்ளலாம். மத்திய அரசாங்கத்தில் எங்களுக்கும் ஒரு பங்கு வேண்டும். சமஷ்டி மூலம் பிரச்னை தீராது.

நியமன அங்கத்தவர் திரு. எம். சி. சுப்பிரமணியம் பேசுகையில், 'நாட்டில் பல பிரச்னைகள் எதிர்நோக்கியுள்ளன. மக்கள் அரசாங்கம் மக்கள் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு பல திட்டங்கள் வகுத்து வருகிறது. கடந்த காலங்களில் நாம் அனுபவித்த பலதரப்பட்ட கஷ்டங்களிலிருந்து விடுபடுவதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இதனை நாம் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். வேலையில்லாத் திண்டாட்டம் தீர சிங்கள-தமிழ் மக்கள் ஐக்கியம்வளர வேண்டும். தமிழ் மக்களிடையே சிறுபான்மை மக்கள் அடைந்துவரும் பல கஷ்டங்கள் படிப்படியாகத் தீர்க்கப்படல் வேண்டும். சோஷலிஸ அடிப்படையில் தான் இவற்றுக்குத் தீர்வு காண முடியும்.

திரு, வி. பொன்னம்பலம் பேசுகையில், மேலை நாடுகளில் அபிவிருத்தி வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன: அங்கே வேலையில்லாத் திண்டாட்டம் இல்லை. மக்களிடையே துன்பம் துயரம் போன்றவைகள் நீங்க வேண்டும். அடிப்படைச் செல்வத்தை சரிவரப் பகிர்ந்து கொள்ள வேண்டும் அப்போதுதான் உண்மையான சமுதாயத்தை உருவாக்க முடியும். அடிமைத் தன்மைகளைந்தெறிவதால் சுதந்திரத்தை மக்கள் அனுபவிக்கலாம். வேறு நாடுகளில் பல இனமக்கள் ஒன்றிப் பிணைந்து வாழ்வதற்குக் காரணம் மேற்கூறிய பிற்போக்குச் சக்திகள் களைந்தெறியப்பட்டமையே. அந்நியர் ஆட்சியில் இருந்த பிடிப்புகளைத் தகர்த்தி பொருளாதாரம் மற்றும் அபிவிருத்திகளில் முன்னேற அரசாங்கம் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற பொதுமக்கள் ஒத்துழைப்பை அரசாங்கத்திற்குக் கொடுக்கவேண்டும் என்றார்

தலைவர் தமது தலைமை உரையில் சோஷலிஸப் பாதையில்தான் எமது இனம் ஏனைய இனத்தவர்களுடன் சமனாக வாழலாம் அப்போதுதான் நாடும் அபிவிருத்தியடைய ஏதுவாகும் என்றார். திரு. ஏ. வைத்திலிங்கம் உட்பட மற்றும்பலர் பேசினர்.

## இரு விசேஷ சித்தியுடன் ஜி. ஸி. ஈ. சித்திபெற்ற இளைஞர்க்கு ஆசிரிய பதவிகள்!

கோட்டை, ஞாயிறு
இரு விசேஷ சித்தியுடன் ஜி. ஸி. ஈ. (சாதாரண)ப் பரீட்சையில் சித்தி பெற்றவர்கள் ஆசிரியர்களாக நியமிக்கப்படவுள்ளார்கள். கல்வி அமைச்சு இந்த முடிவை எடுத்துள்ளது.

ஜி. ஸி. ஈ. (சாதாரண)ப் பரீட்சையில் 6 பாடங்கள் இருதடவைகளில் பெற்றவர்களுக்கும் ஆசிரியராக வரக்கூடிய சந்தர்ப்பத்தை கல்வியமைச்சு வழங்குகிறது

தொகுதிவாரியாக இந்நியமனங்கள் வழங்கப்படும். மூன்று வருடம் அப்பகுதியில் வசித்தவராக இருக்க வேண்டும்.

வீட்டுப்பணி, கலை, விஞ்ஞானம் என்ற மூன்று பிரிவுகளுக்கு ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

சிங்களம் அல்லது கணிதத்தில் சித்திபெற்றவர்களே இவ்வாசிரியர் பதவிகளுக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவர்.

மாவட்டரீதியில் இந்த ஆசிரியர் பதவிகளுக்கான நேர்முகப் பரீட்சைகள் நடைபெறும்.

## தமிழ் ஊழியருக்கு அவகாசம் தருவோம

கோட்டை, ஞாயிறு
சிங்களத்தில் இதுவரை காலமும் தகைமை பெறாத பொது அரசாங்க தமிழ் சேவையாளர்களுக்கு மனிதத் தன்மையோடு மேலும் சிறிதுகால அவகாசம் கொடுக்கப்படும் என பொது நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.


## அடிக்கு ரூ. 15-00

### வீதத்திற்குமேல் சேமியுங்கள்

உள் உறுஞ்சி வெளிவிடும் பைப்புகளுக்கு வளைந்து கொடுக்கும் தன்மையுள்ள அல்கதீன் பாவிப்பதன் மூலம் சேமியுங்கள்.

தண்ணீர் அடிமட்டம் குறைந்த இடங்களிலுள்ள விவசாயிகளுக்கு ஓர் வரப்பிரசாதம்.

நீங்கள் விரும்புவதற்கான காரணங்கள்:—

1. வளைந்துகொடுக்கும் தன்மை—சுருள்போல் வளைந்துகொடுக்கக்கூடிய அல்கதீன் எந்த நீர்பாய்ச்சு முறைக்கும் உகந்தது.
2. சிறந்த செயல்முறை—அழுக்க வேலைகளுக்கும் ஆகாண சக்தி உள்ள வலைகளுக்கும் நேர்த்தியானது.
3. சிக்கனமானது—அல்கதீன் நீடித்துழைப்பது. மற்றைய தயாரிப்புகளைவிட மிகவும், மிகவும் மலிவானது.

கெமிக்கல் இன்டஸ்ட்ரீஸ் (கொழும்பு) லிமிட்.
தபால் பெட்டி நிர், 352, கொழும்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

சத்தியத்தில் நிற்பதென்பது பஞ்சணையில் படுத்திருப்பதல்ல; உண்மையைக் கடைப்பிடிப்பதற்கு தியாகம் தேவைப்படுகிறது. வானமேஇடிந்து தலையில் விழுவதாயிருந்தாலும், நாம் உண்மையைக் கடைப் பிடித்து ஒழுகவேண்டும். — மகாத்மாகாந்தி.

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna
Post Box: 49. Jaffna: Telephone: 889

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் ஆவணி மாதம் 1-ந் திகதி (17-8-70)

## சேகுவேரா இயக்கம்?

'சேகுவேரா' இயக்கம் பற்றி தினசரி ஏதாவது செய்தி வெளிவந்து கொண்டே இருக்கிறது சில செய்திகள் பயங்கரமானவை யாகவுமிருக்கின்றன சென்ற பொதுத்தேர்தல் சமயத்தில் 'சேகுவேரா' இயக்கம் பற்றிய செய்திகள் வெளிவந்ததும் தேர்தல் சமயங்களில் வழக்கமாகக் கிளப்பிவிடப்படும் 'பூச்சாண்டி'தான் இது வென்று பொதுவாகக் கருதப்பட்டது. ஆனாலும் இந்த இயக்கம் பற்றிய செய்தியில் உண்மை இருக்கிறதென்பதைப் பொலிசார் உறுதிப்படுத்தினர். இந்த நாட்டில் ஆயுதப் புரட்சி யொன்றை நடத்துவதுதான் சேகுவேரா இயக்கத்தின் நோக்கம் என்று பொலிஸ் அதிபர் திரு. ஸ்ரான்லி சேனநாயகா இப்போது மீண்டும் தெளிவுபடுத்தியிருக்கிறார். பொலிஸ் இராணுவத்திலும் கூட இந்த இயக்கத்தினர் ஊடுருவ முனையக்கூடுமென்றும் பொலிஸ் அதிபர் தெரிவித்திருக்கிறார். பொலிஸ் அதிபர் தெரிவித்துள்ள இப் பயங்கரத் தகவல்களும் நாட்டின் சில பகுதிகளில் இடையிடையே நடைபெறும் சம்பவங்கள் இராணுவத்திற்குள் இந்த இயக்கத்தினர் ஏற்கனவே ஊடுருவி விட்டார்களா என்ற ஐயத்தையும் அச்சத்தையும் தோற்றுவிப்பதாக உள்ளது.

நமது நாடு ஜனநாயக நாடு. ஜனநாயக அமைப்பில் என்னதான் குறைபாடுகள் இருப்பினும் ஆட்சியில் யாரை அமர்த்தவேண்டும். யாரை அமர்த்தினால் மக்களின் குறைகள் தீர்க்கப்படும் என்பதை ஆராய்ந்து அவர்களை ஆட்சிபீடத்தில் அமர்த்துவதற்கு இந்த நாட்டு மக்களுக்கு உரிமை இருக்கிறது. சென்ற பொதுத்தேர்தல் முடிவு மீண்டும் அமர்த்தாமல் இன்று கூட்டணியை ஆட்சி பீடத்தில் அமர்த்திய மக்களே, கூட்டணியும் தவறுக நடந்தால் அடுத்த முறை ஆட்சியிலிருந்து அகற்றிவிட முடியும். இந் நிலையில் இங்கு ஆயுதப் புரட்சிக்கு என்ன அவசியமிருக்கிறது ஆட்சிபீடத்தில் மாறி மாறி இரு கட்சியினரை அமர்த்துவதால் பயனில்லையென்றால் மக்களுக்கும் நாட்டுக்கும் நல்ல முறையில் சேவை செய்யக்கூடியவர்களைக் கொண்ட புதிய திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தக் கூடிய புதிய இயக்கம் ஒன்றை ஆரம்பித்து மக்களின் விருப்பத்தோடு ஆட்சிப் பொறுப்பை அமைதியான ஜனநாயகமுறையில் ஏற்றுக் கொள்வது கஷ்டமல்ல.

ஆயுதப் புரட்சி நடந்த நாடுகளில் அப்பாவி மக்கள் அடைந்த இன்னல்கள் இங்குள்ளவர்களுக்குத் தெரியாதா?

'சேகுவேரா' இயக்கம் எப்படி ஆரம்பித்தது; எப்படி வளர்ந்தது; இதற்கு எப்படி நிதி கிடைக்கிறது; இதன் தலைவர்கள் யார்? இந்தக் கேள்விகளுக்கெல்லாம் பொலிசார் இதுவரை விடை கண்டுகொள்ளாதது ஏனோ?

இந்த இயக்கத்தைக் கண்டுபிடித்து அது பரவாமல் தடுக்கவேண்டியது மிக மிக அவசியம்.

இதேசமயம் இதுபோன்ற ஓர் இயக்கம் இங்கு ஆரம்பமானதற்கு என்ன காரணம் என்பதையும் ஆராயவேண்டியது அவசியம். ஜனநாயக ஆட்சிஅமைப்பின் கீழ் கட்சி அரசியலில் இதுவரை ஏற்பட்ட குறைகளும் வேலையில்லாத்திண்டாட்டம் கல்விச் சீர்கேடுகளும் இந்நாட்டு இளைஞர் மத்தியில் விரக்தியை ஏற்படுத்தி அதன் விளைவாக இத்தகைய இயக்கம் உருவாகியிருக்கலாம்.

எனவே இந்த வன்முறை இயக்கத்தை வளரவிடாமல்

# பெண்களுக்குத்தனிப்பிரிவு

# 'சேகுவேரா' இயக்கத்தில் பெரிய இடத்துப்பிள்ளைகள்

கோட்டை, ஞாயிறு

'சேகுவேரா' புரட்சி இயக்கம் சம்பந்தமாக ...ப் பொழுது மேலும் பல தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

பிரபல அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் மட்டுமன்றி பெரிய அரசியல் தலைவர்களின் இளம் புதல்வர்களும் இந்த இயக்கத்தின் முக்கிய தூண்களாக விளங்குகிறார்கள் என்பது தெரியவந்துள்ளதாம்.

'சேகுவேரா இயக்கத்தை எங்ஙனம்நடத்துவதென்றும் பெரிய அரசியல் தலைவர்கள் பேச்சுவார்த்தைகள் நடத்திக்கொண்டிருக்கும் அதேவேளையில் அவர்களின் பிள்ளைகள் இரகசியமாக இந்த இயக்கத்துக்கான ஏற்பாடுகளில் தீவிரமாகஇறங்கியுள்ளார்களாம்

'சேகுவேரா' இயக்கத்தின் அங்கத்தவர் எண்ணிக்கை தினமும் உயர்ந்துபோகும் அதே வேளையில் இந்த இயக்கத்தில்சேர்வதுஒரு'டாஷன்' என்று கருதும் ஏராளமான இளவட்டங்கள் இதுபற்றிய தகவல்களைத் தேடித்திரிகிறார்களாம்.

தனிப்பட்ட பொலிஸ் நிலையமொன்றில் குழப்பம் ஒன்றை ஏற்படுத்துவதின் மூலம் அப்பகுதியில் நிலைமையைச் சமாளிக்க இதரபகுதிகளிலுள்ள பொலிஸ்நிலையங்களிலிருந்தெல்லாம் பொலிசார் கோஷ்டி கோஷ்டியாகப் புறப்பட்டுப் போகச் செய்வதன் மூலம், காவல் பலம் குறையும் பொலிஸ் நிலையங்களுக்குள் புகுந்து அங்குள்ள இரண்டொரு காவலர்களைத்தாக்கி ஆயுதங்களையும்இதரப் பொருட்களையும் கைப்பற்றிக்கொள்வதற்கு இவர்கள் திட்டமிட்டது கண்டுபிடிக்கப்பட்டுள்ள தாகவும் செய்தி கிடைத்துள்ளதாம். இதுசம்பந்தமாக 'ருஹுணு' பகுதியில் பரீட்சார்த்த முயற்சிகளும் நடந்துள்ளதாம்.

### இரகசிய சோதனை

'சேகுவேரா' இயக்கம் முப்படைகளிலும் ஊடுருவியுள்ளதாகக் கிடைத்துள்ள தகவல் களைத்தொடர்ந்து முப்படைகளிலும் இரகசிய சோதனைகள் நடத்தும்படியும் துப்பு துலக்கும்படியும் இரகசியப் பொலிசாருக்கு அரசு உத்தரவிட்டிருப்பதாகத் தெரிகின்றது.

இந்த இயக்கத்தில் சம்பந்தப்பட்டவர்கள் முப்படைகளிலும் இருப்பதாகவும் இவர்கள் இரகசியத் தகவல்களை தமது இயக்கத்தவர்களுக்கு கொடுத்து வருகிறார்கள் என்றும் பிரதம மந்திரி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயகாவுக்கு மிகவும் நம்பகமான செய்திகள் கிடைத்துள்ளனவாம்.

இந்த நிலைமைகாரணமாக ஆயுதங்களை மிகப் பத்திரமாகப் பாதுகாக்கும்படியும் ஆயுதங்கள் பற்றிய புள்ளி விபரங்களை அடிக்கடி கவனித்துக்கொள்ளும்படியும் பொலிஸ் அதிபருக்கும், ராணுவத்தளபதிக்கும் அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது பொலிஸ்சேவையில் அல்லது ராணுவத்தில் புதிதாகச் சேர்க்கப்படுகிறவர்கள் இந்த 'சேகுவேரா' இயக்கத்தில் எந்தவிதத்திலாவது சம்பந்தமுடையவர்களாஎன்பதை மிகத் தீவிரமாக ஆராயவேண்டும் என்றும் அவர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாம்.

இதன்காரணமாக ராணுவத்தில் புதியவர்களைச் சேர்க்கும்முறை மாற்றப்படும் என்று கருதப்படுகின்றது.

'சேகு வரா' இயக்கத்தில் பெண்களுக்கான பிரிவு ஒன்றும் செயல்படுவதாகக் கூறப்படுகின்றது. புரட்சி நடவடிக்கைகளில்பெண்களையும் ஈடுபடுத்திக்கொள்ளும் வகையில் இவர்களுக்கு பயிற்சியளிக்கும் திட்டம் ஒன்றும் செயல்படுத்தப்படுவதாக புதிதாகக் கிடைக்கும் செய்திகளிலிருந்து தெரியவருகின்றது. இந்தப் பெண்கள் இயக்கத்தை முதலில் பல்கலைக்கழக மட்டத்திலிருந்து உருவாக்குவதற்கு இரகசிய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றதாம் பல்கலைக்கழகத்தில் பயிலும்மாணவிகள் பலர் தமது ஆபரணங்களைத் தியாகம் செய்வதின் மூலம் இந்த இயக்கத்துக்கு ஆதரவுதர முன்வந்திருக்கிறார்கள்.

### தலைவர்களின் புகைப்படங்கள

'சேகுவேரா' இயக்கத்தின் தலைவர்கள் என்று கருதப்படும் ஏராளமான நபர்களின் புகைப்படங்களைப் பொலிஸ் தலைமைப்பீடம் சகல பொலிஸ்நிலையங்களுக்கும் அனுப்பிவருகின்றது. இந்தப் படங்களில் காணப்படுகின்றவர்களின் நடவடிக்கைகள் சம்பந்தமாக சற்றும் தயக்கம் காட்டவேண்டாம் என்று பொலிசாருக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறதாம்.

திக்வெல்லப் பகுதியில் சேகுவேரா இயக்கநடவடிக்கைகள் மிகத் தீவிரமாகச் செயல்படுகின்றனவாம். இதில்பாடசாலை சிறுவர்களும், ஆசிரியர்களும் அரச ஊழியர்கள், தனிப்பட்ட நபர்களும் ஈடுபட்டுவருகிறார்களாம்.

அண்மையில் இப்பகுதியில் ஒரு காட்டின் மத்தியில் 'சேகுவேரா' இயக்க நடவடிக்கைகள் பற்றிய பிரசார வகுப்பு ஒன்று நடந்ததாகவும்செய்தி வந்துள்ளது. திக்வல்ல, ஹுணு தெனியா, ரத்மலை, ரதம்பலை கொட்டகொடை, நில்வெல்ல, கடாவெல்ல ஆகிய இடங்களில் இப்பொழுது இவ்வியக்கம் தீவிரமடைந்து வந்துள்ளதாம்.

துட்டகைமுனு தமது ராணுவத்துக்கு ஆட்களை சேர்த்துக்கொண்டது போல் அங்கத்தவர் ஒவ்வொருவரும். தமக்கு வேண்டியவர்கள் பத்துப்பேரைச் சேர்க்க வேண்டும் என்று அண்மையில் நாவலப்பிட்டியில் இடம்பெற்ற 'சேகுவேரா' இரகசியக் கூட்டமொன்றில் அவ்வியக்கத்தின்தலைவர்ஒருவர் உபதேசம் செய்தாராம். இந்த நபரின் குரலை மட்டும்தான் கூடியிருந்தவர்கள் கேட்டார்கள் என்றும் நபர் யார் என்று எவருக்கும் தெரியவில்லை என்றும் கூறப்படுகின்றது. இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் பின் வரும் கடமைகளைச்செய்யும் படிகேட்கப்பட்டார்களாம்.

■ தம்பகுதியிலுள்ள, பாலங்கள், போக்குகள் போன்ற முக்கியமானவற்றின் வரைபடங்களைத் தயாரித்துக்கொள்ளுதல்

■ தமது பகுதியிலுள்ள பொலிஸ் நிலையத்தின் பலம் பற்றியும், ஆயுதங்கள் பற்றிய தகவல்களையும் சேகரித்துக்கொள்ளல்,

■ தம் பகுதியிலுள்ளதனிப்பட்டவர்களின் துப்பாக்கிகள் பற்றிய விபரமும் அந்த நபர்கள் பற்றிய விபரமும்

■ தம்பகுதியிலுள்ள பிரதான அரசியல் தலைவர்கள், அவர்களின் வசிப்பிடங்கள் பற்றிய தகவல்கள்.

■ அங்கத்தவர் ஒவ்வொருவரும் குறைந்தது 5 ஆயுதங்களாவது தேடிக்கொள்ளுதல்.

■ செலவைக் குறைத்து மிக எளிய வாழ்க்கை நடத்துவதின்மூலம் பணத்தை மிச்சம் பிடித்தல்.

மாவரல, ஊருபொக்க. பென்கமுவ போன்ற பகுதிகளில் இவ்வியக்கம் தீவிரமாகப் பரவிவருவதாக கம்புறுபிட்டிய செய்தியொன்று கூறுகின்றது.

படித்த இளம் ஆண்பெண்கள் மட்டுமன்றி பிக்குமார்களும் இதில் சேர்ந்துள்ளார்களாம்

மேற்படி தகவல்களை 'ரிவிரெஸ' பத்திரிகை வெளியிட்டிருக்கின்றது

### 12பேர் கைது

இன்றைய அரசாங்கத்துக்கு எதிராக கொரில்லா யுத்தமொன்றை ஆரம்பிக்க வேண்டுமென்று பிரசாரம் செய்துகொண்டிருந்த 'சேகுவேரா' இயக்கத்தலைவர்கள் என்று கருதப்படும் மூவர் உட்படப் 11 பேர் அகலவத்தைப் பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளனர்

# பொலிஸ் நிலையங்களைக் கைப்பற்றத் திட்டம்?

# ஆசிரியர் நியமனம் ரத்து!

உடுப்பிட்டி, ஞாயிறு

வடபகுதியிலுள்ள கரவெட்டி அல்வாய் அச்சுவேலி, புத்தூர் ஆகிய நான்கு தமிழ் பௌளத்த பாடசாலைகளிலும் சம்பளமின்றிப் பணி புரியும் 52 ஆசிரியர்களில் முன்னர் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட 36 ஆசிரியர்களின் நியமனம் திடீரென ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

பிரஸ்தாப நியமனத்தில் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களின் பெயர் விபரம் வெளியிடப்படாமலே நியமனம் நிறுத்திவைக்கப்பட்டுவிட்டது. தொகுதிவாரியாகவே தமிழ் பௌத்த பாடசாலைகள் நான்கிலிருந்தும் அரசாங்கத்தால் தெரிவு செய்யப்பட்டு நியமனம் பெறுவார்கள்.

அவ்வப்பகுதி ஆட்சிமன்ற உறுப்பினர்களும், பொது மக்களும் இவ்வாசிரியர் நியமனம் தொகுதி அடிப்படையிலேயே செய்யப்படவேண்டுமென்றும், நிறுத்தி வைக்கப்பட்ட நியமனத்தில் உரிய தொகுதி ஆசிரியர்கள் புறக்கணிக்கப்பட்டதாகவும் புகார் செய்யப்பட்

## ஆசிரியருக்கு கடிதம்

# இலங்கைக் குடியரசின் பிரஜைகள் யார்?

றுவது 'கறையான் புற்றுக் கட்ட பாம்பு குடியேறுவது போன்றதாகும். 1948 ம் வருடம் இலங்கை சுதந்திரமடைந்தபின் குடியேறியவர்கள் எவரும் கட்டாயமாக அந்நியவர்களாகவே கருதப்படவேண்டும். அவர்கள் மட்டில் அரசாங்கம்மனிதாபிமானத்துடன் தக்கநட... விருந்தாலும் சரி) மக்களின் நல்வாழ்வு கருதி சகல உரிமைகளும் சலுகைகளும் சம உரிமையும் வழங்கப்பட வேண்டும். அது மக்களின் சுபீட்சமான வாழ்விற்கும் நாட்டின் எழுச்சிக்கும் அடிகோலும் என்பதை யாராலும் மறுக்கவோ மறைக்கவோமுடியாது. அப்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களின் குறைகள் தீர்க்கப்படும் என்பதை ஆராய்ந்து அவர்களை ஆட்சிபீடத்தில் அமர்த்துவதற்கு இந்த நாட்டு மக்களுக்கு உரிமை இருக்கிறது. சென்ற பொதுத்தேர்தல் முடிவுகளே இங்கு அமைதியான முறையில் மக்கள் புரட்சி செய்ய முடியுமென்பதற்குச் சான்று! முன்னைய அரசாங்கம் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியதென்பதற்காக அவர்களை ஆட்சிபீடத்தில் சீர்கேடுகளும் இந்நாட்டு இளைஞர் மத்தியில் விரக்தியை ஏற்படுத்தி அதன் விளைவாக இத்தகைய இயக்கம் உருவாகியிருக்கலாம்.

எனவே இந்த வன்முறை இயக்கத்தை வளரவிடாமல் முளையிலேயே கிள்ளியெறிய நடவடிக்கை எடுப்பதுடன் இளைஞர்களினதும், நாட்டு மக்களினதும் குறைகளை அறிந்து அவற்றை நீக்கவும் அவசர அவசரமாக முற்சி மேற்கொள்ளவேண்டியதும் அவசியம்.

## மருந்துத் தட்டுப்பாடு

'ஆஸ்பத்திரிகளில் மருந்துகளுக்குத் தட்டுப்பாடு' என்று செய்தி வெளிவருவது நமது நாட்டில் ஆச்சரியமல்ல. 'யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் மருந்துத்தட்டுப்பாடு' என்பது சிறிதும் அதிசயமல்ல இந்தநிலை மாறிமருந்துத் தட்டுப்பாடு இல்லை என்ற ஆச்சரியமான செய்தி எப்போது தான் வெளிவருமோ!

இருபது முப்பது சதம் விலையுள்ள குளிகைகள் கூட யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் இல்லையாம். அங்கு சிகிச்சைபெறவரும் நோயாளிகளிடம் மருந்துத் துண்டுகளைக் கொடுத்து வெளியே வாங்கிக் கொள்ளுங்கள் என்று டாக்டர்கள் கூறி அனுப்புகிறார்கள். யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி யாழ்ப்பாண நகரிலுள்ள மக்கள்மட்டும் சிகிச்சை பெறும் ஆஸ்பத்திரியல்ல; வடபகுதியிலேயே பெரியஆஸ்பத்திரி குடாநாட்டின் பலபகுதிகளிலிருந்தும் நோயாளிகள் வருகிறார்கள்; வெளியேயுள்ள மருந்துச் சாலைகளில் மருந்துகளைவிலைக்கு வாங்கவேண்டுமானால் நோயாளிகள் ஆஸ்பத்திரிக்கு ஏன் வரவேண்டும் புதிய புதிய கட்டிடங்கள் கட்டி ஆஸ்பத்திரியை விஸ்தரிப்பதில் தான் அர்த்தமுண்டா?

ஓர் ஏழை நோயாளிக்கு நான்கு தடவைகள் டாக்டர்கள் சிலமருந்துகளை எழுதிக் கொடுத்து வெளியேவாங்கும் படி கூறினார்களாம் ஒவ்வொரு மருந்துகளும் டாக்டர் கூறியபடி வாங்கிப்பாவிப்பதானல் அந்தநோயாளிக்கு நூற்றுக்கு மேற்பட்ட ரூபாய் செலவாகும். மருந்தின் பெயர் கூடசிறிய ஒரு துண்டுக் கடதாசியில்தான் எழுதிக் கொடுக்கப்படுகிறதாம் இப்போதுள்ள சட்டத்தின் படி டாக்டரின் கையெழுத்துடன் தான் மருந்துகளை விலைக்கு வாங்க முடியும். நோயாளிக்குப்பணச் செலவுடன் மருந்துக்கடைகளுக்கு அலைந்துதிரிந்து வெறும் கையுடன் திரும்பவேண்டிய அலைச்சலும் ஏமாற்றமும் மற்றொருபுறம்.

ஒரு மருந்துக்குப் பதிலாக வேறு மருந்து கொடுக்க முடியாதா அவசியமான மருந்துகளைக் கூட ஆஸ்பத்திரியில் கொடுக்க முடியாவிட்டால் ஆஸ்பத்திரி எதற்கு?

இது யாருடையதவறு சுகாதார அமைச்சுகவனிக்குமா?.

## அரசியல் ரீதி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கலை கலாச்சாரம் சம்பந்தமாக தமிழ் நாட்டில் ஏற்படும்மாற்றங்கள் மறுமலர்ச்சிகள்பற்றியசெய்திகள்எமக்கு கிடைக்காமல் போவதுடன் இங்கு எம் கலைகளும் கலாசாரமும் வளர்ச்சியடையாமல் குன்றிப் போகவும் செய்யும் அத்துடன் நம் பாரம்பரிய பண்பாடுகளை மக்கள் மறந்துபோகவும் ஏதுவாகும் என்று சிலர் குறிப்பிட்டதாகவும் தெரிகின்றது.

தமிழரசுத் தலைவர் திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. வடபகுதி தமிழரசு எம்பிக்கள் பலரும் கூட்டத்துக்கு வந்திருந்தனர் கிழக்கு மாகாணத்திலிருந்தும் இதர பகுதிகளிலிருந்தும் பிரதிநிதிகள் வந்திருந்தனர்.

# இலங்கைக் குடியரசின் பிரஜைகள் யார்?

இந்துசமுத்திரத்தின் முத்து இரத்தினதீபம் ஈழம் எனப் பலராலும் வர்ணிக்கப்படும் இலங்கை வானளாவ உயர்ந்த பலமலைகளையும் வற்ருத அருவிகளையும் செழிப்புமிகு செந்நெற் களனிகளையும் தன்னகத்தே கொண்டு பல்வளமும் பாங்குற விளங்குகிறது. உலக நாடுகளிற் சிறந்ததெனப் புகழ்பெற்ற முத்துக்களும் இரத்தினங்களும் இலங்கையின் பெருமையை ஆழிசூழ் உலகெலாம் பறைசாற்றி நிற்கின்றன. இருந்தும் இப்போது இந்நாட்டில் பெரும் பிரச்னை தலைதூக்கியுள்ளது. இலங்கை இரத்தஞ் சிந்தா முறையில் நீதி அடிப்படையில் சுதந்திரமடைந்து குடியரசாகப் போகும் இவ்வேளையில் இப் பிரச்னைக்கு தீர்வுகாண வேண்டும் இக்கொந்தளிப்பான பிரச்னைக்கு சமாதானமான முறையில் முடிவுகாணவேண்டும். அப் பிரச்னை யாதெனில் இலங்கையின் உண்மைப் பிரசைகள் யார்? எவருக்குப்பிரசா உரிமை வழங்க வேண்டும் என்பதே.

புவியியல் விற்பன்னர் சிலரின் ஆய்விற்கமைய அவுஸ்திரேலியா, யாவா, சுமாத்திரா, போர்னியோ, பிலிப்பைன்ஸ், இலங்கை போன்ற நாடுகளெல்லாம் ஒன்றாக இணைந்து ஒரே ஆசியக் கண்டமாக வங்கக் கடலில் வதிந்திருந்ததெனக் கூறப்படுகிறது. காலப் போக்கில் ஏற்பட்ட கடற்கொந்தளிப்புகள் காரணமாகவும் பூகம்பங்கள் காரணமாகவும் வெவ்வேருகத் துண்டிக்கப்பட்டதென அறியப்படுகிறது. மேற்கூறிய நாடுகள் ஒன்ருக ஒருங்கே இணைந்து ஒரே ஆசியக் கண்டமாக இருந்தது என்பதற்குச் சான்ருக குறித்த நாடுகளில் நிலவும் கலாச்சாரம் சமய ஆராதனை ஒழுங்குமுறைகள் என்பன ஏறத்தாழ ஒற்றுமையாகவே விளங்குகின்றன.

மேலும் இந் நாடுகளில் நடாத்திய புதைபொருள் ஆய்வின் பயனக புலப்பட்ட புராதனப் பொருட்களும் கல்வெட்டுக்களும் இதற்குச் சான்று பகர்கின்றன. அப்படியாயின் அவுஸ்திரேலியா யாவா, சுமாத்திரா, போர்னியோ பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளிற் போல் வேடர்கள்தான் இலங்கையின பூர்வீக மக்களாய் இருத்தல் கூடுமன்றோ வேடர் என்னும் இச் சாதியார் மிகப் புராதனகாலத் தொட்டே வேற்று நாட்டிலிருந்து வந்தார்களென ஜி. சி. மெண்டிஸ் போன்ற வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர். வேறு சாதியினர் இலங்கையிற் குடியேறுவதற்கு பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னமே வேடர் என்னும் அச் சாதியினர்தான் குடியேறினரென நம்பப்படுகிறது.

வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால் சிங்களமும் இந்தியாவிலிருந்தே இடம் பெயர்ந்தனரென்பது புலப்படும்.

எனவே தற்கால சுதந்தர இலங்கையில் வசிக்கும் சிங்களவர் இலங்கைத் தமிழர், இந்தியத் தமிழர், இலங்கைச் சோனர், பறங்கியர் மலேயர் எல்லோரும் அவர்கள் கல் தோன்றி மண் தோன்ருக் காலத்தில் குடியேறினுலும்சரி மண்தோண்டிப் பொன் தோண்டும் காலத்தில் குடியேறினுலும் சரி இலங்கையில் தேயிலை இறப்பர், கொக்கோ, கோப்பி போன்ற பயிர்கள் செழித்தோங்கும் காலத்திற் குடியேறினுலும் சரி இலங்கை சுதந்திரமடையுமுன் குடியேறி ஒவ்வொருவரும் இலங்கைப் பிரசையாகவே கணிக்கப்பட வேண்டும். அவர்களே இலங்கையின் உண்மைப் பிரஜைகள்.

நால்வளம் கொழிக்கும் நன்னுடாம் நம்மிலங்கை பல்வேறு அரசர்களாலும் வேற்றுநாட்டு அரசர்களாலும் ஆட்சி செய்யப்பட்டு வந்ததென்பது ஆணித்தரமான உண்மை. இலங்கையை ஆட்சி புரிவதற்கு இந்தியாவிலிருந்தும் பல அரசர்களும் வரவழைக்கப் பட்டுள்ளனர் என்பதில் ஐயமில்லை. இறுதியாகஇலங்கை பிரித்தானியரால் ஆட்சி புரியப்பட்டது, அப்போது வாழ்ந்த மக்கள் கண்ணிலும் இனியசுதந்திரத்தை இழந்துவிட்டு கைகட்டிப் பிழைக்க விரும்பவில்லை. சுதந்திரப் பறவைகளாகப்பறக்க விரும்பினார்கள். இவைகளின் முடிவாக தீராத சுதந்திர வேட்கையின் பயனக தியாகத்தின் பயனாக 1948ம் வருடம் மாசித் திங்கள் 4ம் நாள் இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்தது. இலங்கையின் சுதந்திரத்திற்காகப் பாடுபட்டுச் சுதந்திரம் பெற்றுக் கொடுத்த பெருமை இலங்கை வாழ் சகல இனமக்களையும்சாரும் இவர்கள் சிங்களவர், தமிழர் சோனகர், பறங்கியர், மலையார், வேடர்யாராகவிருந்தாலும்சரி இவர்களின்புகழ் பொன்னெழுத்துக்களாற் பொறிக்கப்பட வேண்டியதாகும். நாம் இன்று சுதந்திரமாக 'யாருக்கும் யாரும் அடிமையில்லை' என்று நிமிர்ந்து நடப்பதற்கு அடிகோலியவர்கள் அவர்களே.

1948ம் வருடம் இலங்கை சுதந்திரம் அடையும்போது யார் யார் இலங்கையில்குடியிருந்தார்களோ அவர்கள் ஒவ்வொருவரும் இலங்கைப் பிரசைகளாகவே கருதப்பட்டு, இலங்கையர் என்று அழைக்கப்பட வேண்டும். அவர்களே இலங்கையின் உண்மைப்பிரசைகள் அவர்களுக்கே இலங்கைப்பிரசாவுரிமை வழங்கப்பட வேண்டும். இவர்கள் சிங்களவர், இலங்கைத் தமிழர், இந்தியத் தமிழர், மலாயர், பறங்கியர், சோனகர், வேடர் என்ற சாதி, மத. மொழி பேதமின்றி இலங்கை மக்களாகவ்வகருதப்படவேண்டும் அவர்கள்எம்மதத்தை தழுவினுலும்சரிஎம்மொழியைப் பேசினுலும்சரி, இவர்களை இலங்கை மக்களென்றே அழைக்கவேண்டும். சுதந்திர இலங்கையில் அவர்களுக்குச் சம உரிமையும் சம அந்தஸ்தும் சகல சலுகைகளும் விசேடமாக மொழி உரிமையும் வழங்கி இலங்கைப் பிரசைகளாக மதித்து மகிழ்விக்க வேண்டும். இலங்கையின் வளர்ச்சிக்கும் சுதந்திரத்திற்கும் அல்லும் பகலும் அயராது உழைத்தவர்கள் அவர்களே. இவர்களிருக்க இலங்கை சுதந்திரமடைந்தபின் எவரும் குடியேறினால் அவர்கள் அந்நியரே போன்றதாகும். 1948ம் வருடம் இலங்கை சுதந்திரமடைந்தபின் குடியேறியவர்கள் எவரும் கட்டாயமாக அந்நியவர்களாகவே கருதப்படவேண்டும். அவர்கள் மட்டில் அரசாங்கம்மனிதாபிமானத்துடன் தக்கநடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

எனவே, நம் நாடு குடியரசாகப் பிரகடனப்படுத்தப் படும்பொழுது மேற்கூறிய அடிப்படையில் (சிறிமா — சாஸ்திரி ஒப்பந்தம் எதுவாக இருந்தாலும்) மக்களும் சலுகைகளும் சம உரிமையும் வழங்கப்பட வேண்டும். அது மக்களின் சுபீட்சமான வாழ்விற்கும் நாட்டின் எழுச்சிக்கும் அடிகோலும் என்பதை யாராலும் மறுக்கவோ மறைக்கவோமுடியாது. அப்போது நம் ஈழமணித்திருநாடு மென்மேலும் பல்வளமும் பாங்குற விளங்கி சீரும் சிறப்பும் திருவும் பெறும்.

இ. ஜெகதீசன்

மூதூர்-7

## சீனப்பிரதமரின் வெளிநாட்டுப்பயணம்

பீகிங், ஆகஸ்ட் 16

சீனவின் உதவியுடன் ஆபிரிக்கக் குடியரசான தன்சானியா ஸாம்பியா ஆகிய நாடுகளுக்கிடையே ரயில் பாதை அமைக்கப்படுகிறது. இப்பாதையின் அங்குரார்ப்பணக்கூட்டத்தில் கலந்துகொள்ளும் சீனக் குழுவிற்கு சூ-என்-லாய் தலைமைவகித்துச் செல்வார்.

(2)

## சமூக உரிமை நாடுகளில் சிறுபான்மையினரின் மொழி உரிமை

இம்மாதம் 10-ம் திகதி 'ஈழநாடு' இதழில் 'சோஷலிஸ அமைப்பில் தாய்மொழி உபயோகம்' என்ற கட்டுரை வெளியிடப்பட்டமை பாராட்டுக்குரியது. ஆதிக்கமும் சுரண்டலுமற்ற அவ்வகை நாடுகளிலேயே சிறுபான்மை மக்களின்மொழிகளுக்குஉரிய இடம் அளிக்கப்பட்டுள்ளது அத்தகைய சோஷலிஸ நாடுகள்பற்றி நம்மக்கள் மேலும் அதிகம் அறிந்துகொள்ளல் நல்ல பயன்விளைக்கும்.

ரஷ்ய தேசம்பற்றி மேற்குறித்த கட்டுரையில் குறிப்பிடப்படாத சில விஷயங்களை இங்கு குறிப்பிடவிரும்புகிறேன். அந்நாடு புரட்சியின் பின்னர் குடியரசாகப் பிரகடனப்படுத்தப்பட்டது அப்போது அங்குபேசப்பட்ட சில மொழிகளுக்கு எழுத்துப் படிவமே கிடையாது. அதனல் அரசாங்கக் கட்டளைப்படி விஞ்ஞானக் கழகம் பல குழுக்களையமைத்து அவ் வேறுபட்ட மொழிகளுக்கு எழுத்துப்படிவம் கொடுத்து இலக்கணம் உருவாக்கி. பாடப்புத்தகங்களை எழுதி அம்மொழி மூலமே கல்வியும் கற்பித்தது. உதாரணமாக ஆதிகால மொழியாக பாஷ்கிர்களுடைய மொழிக்கு முற்றிலும் அந்நிய மொழியாகிய இலத்தீன் மொழி எழுத்துக்களைக்கொண்டே எழுத்து வடிவம் கொண்டனர். தாய் மொழி மூலம் கல்விகற்பிப்பதற்காக இத்தகைய சிரமங்களையெல்லாம் பொருட்படுத்தாது ஊக்கமளித்த உதாரணம் வரலாற்றில் வேறெங்கும் காணமுடியாதவை. மேலும் வேறுபட்ட இம்மொழிகளே அவை வழங்கும் பிரதேசங்களில் உத்தியோக மொழிகளாகவும் விளங்குகின்றன. பேராசிரியர் ஜனேவ்ஸ்கியின் நேஷனல் மைனேரிட்டீஸ் என்ற நூலின்படி 1935ல் என்பதுக்கு மேற்பட்ட மொழிகள் அங்கு போதனுமொழிகளாக விளங்கின அத்துடன் சுமார் எண்பத்தெட்டுமொழிகளில் செய்தித் தாள்களும் வெளியாகிக்கொண்டிருந்தன மேலும் அங்கு ரஷ்ய மொழி பேசும்மக்களே பெரும்பான்மையாக இருப்பினும் அவர்களின் நாட்டின் பெயராகிய 'சோவியத் சோஷலிஸக்குடியரசுகளின் கூட்டு' என்பதில் அவர்களின் இனத்தைக் குறிக்கும் ஒரு சொல்லும் இல்லை. இது பொதுவுடமையரசினரால் வேண்டுமென்றேசெய்யப்பட்ட ஒன்றென்பது கவனிக்கத்தக்கது.

பிறிதொரு சமூகவுடமை நாடாகிய யூகோஸ்லாவியாவில் மூன்று மொழிகள் உத்தியோக மொழிகளாகச் சமத்துவம்வகின்றன. ஆனல் அங்கு பெரும்பான்மை மக்களால் பேசப்படுவது செர்மியன்மொழி. அம்மொழி ஏனையமொழிபேசுவோருக்கு இரண்டாவது மொழியாகக் கற்பிக்கப்பட வேண்டுமென்ற கட்டாயம் எதுவுமில்லை. விரும்பினல் கற்றுக் கொள்ளலாம்; அவ்வளவுதான் எல்லா மொழிகளுக்கும் முழுச் சுதந்திரமும் அளிக்கப்பட்டிருக்கிறதென்ற மனப்பாங்குஏற்பட அங்ஙனம் செய்யப்பட்டுள்ளது. இதனைத் தமக்கு யூகோஸ்லாவிய முன்னள் அமைச்சரொருவர் கூறியதாக அமரர் நேருஜி தமது பேச்சொன்றில் குறிப்பிட்டுள்ளார். எல்லோருக்கும் எல்லாவகையிலும் சமத்துவமளிக்கவிரும்பும் சமூகவுடமை நாடுகளில்இங்ஙனம் மிகமுன்மாதிரியான முறைகளில் சிறுபான்மையினரின் மொழியுரிமைகள் பேணப்படுகின்றன.

சு. மகாலிங்கம்,

அனலைதீவு.

மக்களும் இவ்வாசிரியர் நியமனம் தொகுதி அடிப்படையிலேயே செய்யப்பட வேண்டுமென்றும், நிறுத்தி வைக்கப்பட்ட நியமனத்தில் உரிய தொகுதி ஆசிரியர்கள் புறக்கணிக்கப்பட்டதாகவும் புகார் செய்யப்பட்டதைத் தொடர்ந்து கல்வியமைச்சர் திரு பதியுதீன் முகம்மது இந்நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்து நான்கு தமிழ் பௌத்த பாடசாலைகளையும் சேர்ந்த சம்பளமின்றிப் பணி புரிந்து வரும் 52 ஆசிரியர்களும் கடந்த 14-ந் திகதி வடபகுதி கல்வி அலுவலகத்தில் மீண்டும் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இந்நேர்முகப்பரீட்சையில் பிரஸ்தாப ஆசிரியர்கள் அத்தொகுதியில் பிறப்பிலிருந்து இன்று வரை நிரந்தரமாக வசித்தவர்களா என்பது பற்றி நன்கு பரிசீலனை செய்யப்பட்டது. இதுசம்பந்தமாகத் திரட்டப்பட்ட விபரங்களை வடமாநிலக் கல்வியதிபதி உடனடியாகக் கல்வியமைச்சுக்கு அனுப்பி வைத்துள்ளார்

## மரண அறிவித்தல்

### ஆ. தெட்ஷணாமூர்த்தி

உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலையின் இளைப்பாறிய ஆசிரியரும், நாகம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சற்குணமலர், ஆறுமுகசாமி(P W D யாழ்ப்பாணம்) ஆகியோரின் தந்தையும், சிவசுப்பிரமணியம் (Shorff Marketing Dept) ஜெயராணி ஆகியோரின் மாமனாரும், கணபதிப்பிள்ளையின் (ப. நே. கூ. சங்கம் உடுவில்) மைத்துனருமாகிய ஆ. தெட்ஷணாமூர்த்தி சிவபதம் அடைந்துவிட்டார். அன்னாரின் பூதவுடல் இன்று (17-8-70) பிற்பகல் 2 மணியளவில் பிப்பிலி மையானத்தில் தகனஞ் செய்யப்படும்.

2137

## தேவை

பிறசியர்ஸ் தைப்பதில் அனுபவமிக்க பெண்களும் வாசனைத் திரவியங்கள் அடைப்பதற்கு சிறு பெண்பிள்ளைகளும் தேவை. 3 மணி முதல் 5 மணி வரை நேரில் வரவும். O. B. இன்டஸ்றீஸ், 8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

2181

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 17-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org